www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மே 2011
ரூ. 7.00



## ஓட்டுப் பொறுக்குவதற்கு எதிரெதிர் அணி!

# கார்ப்பரேட் சேவையில் ஓரணி!

படிப்பகம்

www.padippakam.com

# “இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கான ஜனநாயகம்! ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!”

## – புரட்சிகர அமைப்புகளின் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்

**ஸ்**பெக்ட்ரம் ஊழல் – கொள்ளை வெளியானதிலிருந்து கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு எதிராக கடந்த ஜனவரியிலிருந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வந்த ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், ‘‘இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்கான ஜனநாயகம்! கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்! இக்கொள்ளையர்களின் சொத்துக்களைப் பறித்தெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்! ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!’’ என்ற முழக்கத்துடன் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரத்தைத் தமிழகமெங்கும் வீச்சாக நடத்தின. இதையொட்டிப் பொதுக் கூட்டங்கள் நடத்தத் தமிழகமெங்கும் அனுமதி மறுத்து போலீசு அடாவடித்தனம் செய்த நிலையில், துண்டுப் பிரசுரம் – தெருமுனைக் கூட்டங்கள் மூலம் வீச்சான பிரச்சாரத்தை இவ்வமைப்புகள் நடத்தின.


திருச்சி-துவாக்குடியில்...

‘‘எங்கள் வேட்பாளர் பைரவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர், சொத்து சேர்க்கத் தெரியாதவர், ஆடம்பர சுகபோகங்களை நாடாதவர், அந்நியரை எதிர்த்துக் குரல் கொடுப்பவர், எட்டி உதைத்தாலும் காலை நக்கும் நன்றி விசுவாசமிக்கவர், நிற்க நேரமில்லாமல் ஊரெங்கும் சுற்றி வருபவர், கல்லடிக்கும் சொல்லடிக்கும் ஆளானவர்’’ – என்ற அறிவிப்போடு, இப்படிப்பட்ட உயர்ந்த வேட்பாளரான திருவாளர் நாய்க்கு வாக்கு சேகரிக்கும் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார இயக்கத்தை திருச்சி துவாக்குடி பகுதியில் 11.04.2011 அன்று இப்புரட்சிகர அமைப்பினர் மேற்கொண்டனர். பட்டாசுகள் அதிர, தாரை–தப்பட்டைகள் முழங்க, பொன்னாடை போர்த்திய நாய் ஊர்வலமாக வர, ஆரவாரமாக நடந்த இந்த –தனப் பிரச்சாரம் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. ஓட்டுப் போடாதே என்று பிரச்சாரம் செய்ய அனுமதி மறுத்த போலீசு, நாய் வேட்பாளருக்கு ஓட்டுப் போடுங்கள் என்று பிரச்சாரம் செய்ததையும் தடுத்து, பெண்கள் – குழந்தைகள் உள்ளிட்டு 40-க்கும் மேற்பட்டோரைக் கைது செய்து ‘ஜனநாயக’க் கடமையாற்றியது. 10.04.2011 அன்று மணப்பாறையில் காலை முதல் மாலை வரை தொடர்ந்து ஆட்டோ மூலம் பிரச்சாரம் செய்து 15 இடங்களில் துண்டுப் பிரசுரங்களுடன் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சென்னை – செங்குன்றத்தில் ‘‘ஓட்டுப் போடாதே! புரட்சி செய்! கார்ப்பரேட் கொள்ளைக்கான தேர்தலைப் புறக்கணிப்போம்!’’ என்ற முழக்கத்துடன் இவ்வமைப்புகளின் சார்பில் 6.4.2011 அன்று பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. செயலர் தோழர் சுதேஷ் குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், இது கார்ப்பரேட் கொள்ளைக்கான ஜனநாயகம் என்பதையும், தமிழக மக்களைக் குடிகாரர்களாக்கி இலவசங்களை வாரியிறைக்கும் ஓட்டுக்கட்சிகளின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தியும், கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளையைச் சட்டமன்ற – நாடாளுமன்றத்தால் தடுத்து நிறுத்த முடியாது, புரட்சி ஒன்றே தீர்வு என்பதை விளக்கியும் உரையாற்றினார். கார்ப்பரேட் கொள்ளையை முறியடிக்க ஓட்டுப் பாதையைப் புறக்கணித்து புரட்சிப் பாதையில் அணிதிரள அறைகூவிய ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி பகுதிவாழ் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.


உசிலம்பட்டி வட்டாரத்தில்...


திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில்...

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பகுதியில் தொடர்ந்து தேர்தல் புறக்கணிப்புப் பொதுக்கூட்டங்கள் – தெருமுனைக் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்து போலீசு அடாவடித்தனமாக நடந்து கொண்டதால், திட்டமிடப்பட்ட பொதுக்கூட்டங்களுக்குப் பதிலாக பெரிய அளவிலான தட்டிகளுடன் பறையடித்து கிராமங்கள் தோறும் வீதிவீதியாகப்

தொடர்ச்சி 35–ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 7
மே 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## ராஜபக்சேவின் போர்க்குற்றங்கள்:

# ஏகாதிபத்தியங்களின் இரட்டை வேடம்

இலங்கையில் கடந்த 2009-ஆம் ஆண்டு புலிகளுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இறுதிக்கட்ட போரின்போது நடந்த படுகொலைகள், அத்துமீறல்கள் குறித்துப் பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்களின்படி எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்துத் தனக்கு ஆலோசனை வழங்குமாறு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் அமைத்த மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு அளித்துள்ள அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட, மனித குல வரலாற்றில் நடந்த இன்னுமொரு மிகக் கொடூரமான இனப்படுகொலை பற்றியும், மனித உரிமை மீறல்கள்- அட்டூழியங்களையும் இந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது. போர்க்குற்றங்கள் பற்றிய அனைத்துலகச் சட்டங்களின்படி, இலங்கை அரசே விசாரணையை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கி, அதன் செயற்பாடுகளைக் கண்காணிக்க சுதந்திரமான பன்னாட்டுக் குழுவை ஐ.நா. பொதுச் செயலர் அமைக்க வேண்டும் என்றும் இந்த நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த அறிக்கை இலங்கை அரசு பாரிய போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாகப் பட்டியலிடும் அதேசமயம், புலிகளும் பெருமளவிலான போர்க்குற்றங்களை இழைத்துள்ளதாகப் பட்டியலிட்டு இருதரப்பையும் சம அளவில் வைத்துத்தான் குற்றம் சாட்டியுள்ளது. இருப்பினும், ''புலிகள் அளித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அடிப்படையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவின் ஒருதலைபட்சமான அறிக்கையை ஏற்க இயலாது'' என்றும், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் எல்லைமீறித் தலையிட்டு அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஐ.நா. குழு சீர்குலைப்பதாகவும் குற்றம் சாட்டி, ராஜபக்சே கும்பல் தேசிய வெறியையும் இனவெறியையும் தூண்டிவிட்டு வருகிறது.

ஐ.நா. பொதுச் செயலர் தனிப்பட்ட முறையில் தனக்கு ஆலோசனை வழங்க இக்குழுவை நியமித்துள்ளாரே தவிர, இது ஐ.நா. மன்றத்தால் நியமிக்கப்பட்ட குழு அல்ல. இக்குழுவின் அறிக்கையும் ஐ.நா. மன்றத்தின் அறிக்கையோ, போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை அறிக்கையோ அல்ல. இப்படித்தான், கடந்த 2009-ஆம் ஆண்டில் ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைக் கவுன்சில் என்ற எவ்வித அதிகாரமும் இல்லாத அமைப்பின் வாயிலாக, ஈழப்போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இறுதிப் போரின்போது நடந்த ஈழத் தமிழினப் படுகொலையையும் போர்க் குற்றங்களையும் சாடி அனைத்துலக மனித உரிமைக்கான தன்னார்வ அமைப்புகள் கடும் கண்டனத்தை தெரிவித்ததால் ஜனநாயக நாடகமாடுவதற்காகவும், ஐரோப்பிய நாடுகளில் போராடிய புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கு தற்காலிக மன ஆறுதல் தருவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட பாசிபிச சதியாகவே இப்படியொரு தீர்மானம் அப்போது நிறைவேற்றப்பட்டது. இதை ஐ.நா. பொதுச் சபையில் வைத்து விவாதித்துப் பாதுகாப்புக் கவுன்சிலில் அங்கீகரித்தால்தான் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதால், அத்தீர்மானம் வெறும் காகிதத் தீர்மானமாக முடங்கிப் போனது. இப்போது மீண்டும் அதேவழியில் ஐ.நா. பொதுச் செயலர் நியமித்துள்ள நிபுணர் குழுவின் அறிக்கையும் அமைந்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான இன்றைய ஒற்றைத் துருவ ஏகாதிபத்திய உலகில், இனப்படுகொலைகளை நடத்திவரும் பாசிச - இராணுவ சர்வாதி



படிப்பகம்

www.padippakam.com

கார அரசுகள் அனைத்தும் ஏகாதிபத்தியங்களின் விருப்பத்திற்கேற்ப கண்டும் காணாமல் விடப்படுகின்றன அல்லது விசாரணை மேற்கொள்ளப்பட்டு தலையீடும் ஆக்கிரமிப்பும் தொடர்கின்றன. அதேசமயம், அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களின் தலையீட்டையோ அத்துமீறலையோ ஆக்கிரமிப்பையோ யாரும் வாயளவில்கூட கண்டிக்க முடியாது.



இத்தகைய நிலைமையில், அமெரிக்காவும் அதன் தலைமையிலான ஏகாதிபத்திய உலகமும் இலங்கை அரசின் போர்க்குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் ஒதுக்கிவிடவே விரும்புகின்றன. அதேசமயம், ஈழத் தமிழின அழிப்புப் போர் குறித்து அனைத்துலக மனித உரிமை அமைப்புகளின் கண்டனத்தால், ஜனநாயக நாடகமாடவும் செய்கின்றன. ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்க ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கு ஏற்பச் செயல்படும் கைப்பாவையான ஐ.நா. மன்றமும் அதற்கேற்ப தலையாட்டுகிறது. இறுதிக்கட்ட ஈழப் போரில் நடந்துள்ள மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டு நிபுணர் குழு மூலம் ஆவணப்படுத்தி, அவசியமேற்படும்போது ராஜபக்சே கும்பலுக்கு எதிராக அதைப் பயன்படுத்தலாம் என்பதுதான் ஏகாதிபத்தியங்களின் திட்டமாக உள்ளது. மனித உரிமை - ஜனநாயகம் - பயங்கரவாத எதிர்ப்பு நாடகமாடிக் கொண்டு ஈராக், ஆப்கான் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போர்கள் மட்டுமல்ல; அண்மைக் காலமாக, அரபு நாடுகளில் அமெரிக்க விசுவாச சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் தமது ஆதிக்கத்துக்கும் கொள்ளைக்கும் எதிரானதாகத் திரும்பிவிடாதிருக்க, மனித உரிமை - ஜனநாயக நாடகமாடிக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் இந்த உண்மையை நிரூபித்துக் காட்டுகின்றன.

மறுபுறம், இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவுக்குப் போட்டியாக இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்த மேற்கொள்ளும் முயற்சியாகவே இலங்கை அரசுக்கு ரஷ்யா, சீனா முதலான நாடுகள் ஆதரவளிக்கின்றன. இந்தியாவுக்குப் போட்டியாக இலங்கையை தாஜா செய்யும் நோக்கத்துடன் அமெரிக்காவின் நம்பகமான கூட்டாளியான பாகிஸ்தான், ஈழப் போரின்போது இலங்கைக்கு ஏராளமான ஆயுதங்களை விற்று ராஜபக்சே கும்பலுக்கு ஆதரவாக நின்றது. இலங்கை அரசு சீனா பக்கம் சாய்ந்து விடாமல் தனது மேலாதிக்கப் பிடியில் இருத்தி வைப்பதற்காகவே இந்தியா, ஈழத்தில் மறைமுகமாகப் போரை வழிநடத்தி ராஜபக்சே கும்பலுக்கு உற்ற துணையாக நின்றது. மனித உரிமை மீறல் குறித்து விசாரணை நடந்தால், இந்தியாவும் பாகிஸ்தானும் சீனாவும் பதில் சொல்ல வேண்டிய நிர்பந்தம் உள்ளது. இத்தகைய நிலைமைகள்தான் இலங்கை அரசை இந்த நாடுகள் ஆதரிக்கக் காரணமாக உள்ளன.

இந்திய அரசு ஈழத்தமிழின அழிப்புப் போரில் முக்கிய பங்கு வகித்திருப்பது மட்டுமல்ல; காஷ்மீர், வடகிழக்கிந்தியாவின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் மற்றும் இந்தியாவின் மத்திய கிழக்குப் பகுதியில் காட்டுவேட்டை என்ற பெயரில் நடத்திவரும் நரவேட்டை முதலானவற்றிலும் மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து அப்பட்டமான அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள கொடூர அரசு என்பது நிரூபணமாகியுள்ளது. இருப்பினும், ஒரு போரில் மனித உரிமை ஜனநாயக உரிமைகளை மதிக்காமல் அட்டூழியங்களில் ஈடுபடுவதுதான் போர்க் குற்றம் என்பதாகவும், உள்நாட்டில் அரசு பயங்கரவாத அட்டூழியங்களையும் புரட்சிகர-ஜனநாயக இயக்கங்களின் போராட்டங்களையும் சமப்படுத்தி இருதரப்பும் மனித உரிமைகளை மீறிவிட்டதாகக் குற்றம் சாட்டுவதாகவும்தான் ஏகாதிபத்தியங்கள் மற்றும் சில மனித உரிமை அமைப்புகளின் நடவடிக்கைகளாக உள்ளன. தமிழினவாதிகளும் ஈழ ஆதரவு நாடகமாடும் ஓட்டுக் கட்சிகளும், ஏதோ இந்திய அரசு இதுவரை போர்க்குற்றங்களில் ஈடுபடாதது போலவும், ராஜபக்சே கும்பலுக்கு ஆதரவாக நின்று ஈழப் போரை வழிநடத்தியதுதான் போர்க்குற்றம் என்பதாகவும் மாய்மாலம் செய்து, இந்திய அரசு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கின்றனர்.

இன்றைய நிலையில், சர்வதேச சமூகம் என்று தமிழினவாதிகளால் சித்தரிக்கப்படும் மேற்கத்திய ஏகாதிபத்திய அரசுகள் எவையும் போர்க்குற்றவாளியான ராஜபக்சே கும்பலுக்கு எதிராக இல்லை. அப்படி இருப்பதைப் போல தமிழினவாதிகள் இன்னமும் நம்புகின்றனர். ராஜபக்சே கும்பல் மீது போர்க்குற்றம் சாட்டும் மேலைநாடுகளின் மனித உரிமை இயக்கங்களும்கூட ஒரு சில செயல்வீரர்களின் நடவடிக்கைகளாகவும் ஊடகங்களின் அம்பலப்படுத்தல்களாகவும் அமெரிக்காவின் தலையீட்டைக் கோருவதாகவும் உள்ளனவே தவிர, மக்கள்திரள் இயக்கமாக முன்னேறவில்லை. இந்நிலையில், ஈழத்திலும் இந்தியாவிலும் மட்டுமின்றி, உலகெங்கும் போர்க்குற்றவாளி ராஜபக்சே கும்பலுக்கு எதிராக மக்களிடம் பிரச்சாரம் செய்து பொதுக்கருத்தை உருவாக்குவதும், ஏகாதிபத்திய சதிகளை அம்பலப்படுத்தி, அக்கும்பலைத் தண்டிக்க மக்கள்திரள் இயக்கங்களைக் கட்டியமைத்து இறுதிவரை முன்னெடுத்துச் செல்வதும்தான் இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. •



படிப்பகம்

www.padippakam.com

# ஊழல் ஒழிப்பு: ஹஸாரேவின் நாடகமும் நக்சல்பாரிகளின் போராட்டமும்

**க**டந்த மார்ச் மாதம் 4-ம் தேதி, விருத்தாசலத்திலுள்ள தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கு துறை (TNCSC)யின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், ஒரு மூட்டைக்கு 8 கிலோ அளவுக்கு எடை கூடுதலாக வைத்து நெல் கொள்முதல் செய்த மோசடியை அறிந்து, அங்கே குவிந்திருந்த -ற்றுக்கணக்கான விவசாயிகளை அணிதிரட்டி விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் நெல் கொள்முதல் நிலைய ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். 19.1.2011 முதல் 3.3.2011 வரை எத்தனை மூட்டை நெல் கொள்முதல் செய்யப்பட்டனவோ, அவை அனைத்திற்கும் மூட்டைக்கு நான்கு கிலோ வீதம் பணம் தந்துவிடுவதாக நெல் கொள்முதல் நிலையத்தின் பட்டியல் எழுத்தர் உறுதியளித்தார். வாக்குறுதி அளித்த அந்தப் பெருச்சாளி தப்பியோடியதைத் தொடர்ந்து, அந்நிலையத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 4000 நெல் மூட்டைகளையும் அதன் அலுவலக பதிவேடுகள், இரு எடைபோடும் இயந்திரங்கள் ஆகியவற்றையும் விவசாயிகளின் ஒப்புதலோடு பூட்டிவிட்டு, அலுவலகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வி.வி.மு. எடுத்துக்கொண்டது.

5.3.2011 அன்று அலுவலகத்தைத் திறக்க வந்த நெல் கொள்முதல் நிறுவனத்தின் அதிகாரிகள், அந்த ஊழல் எழுத்தரை ஒப்படைக்க மறுத்துவிட்டு அங்கிருந்து காரில் ஏறி தப்பிக்க முயன்ற போது, வி.வி.மு. வழிகாட்டுதலில் அந்த அதிகாரிகளை விவசாயிகள் சிறைபிடித்தனர். இதனால் குலை நடுங்கிப்போன அதிகாரிகள், கொள்ளையில் கூட்டுச் சேர்ந்துள்ள உயர் அதிகாரிகளுக்குத் தகவல் தர, குடிமைப் பொருள் வழங்கு துறையின் கடலூர் மாவட்டத் துணை மேலாளர் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழு 6.3.2011 அன்று பேச்சுவார்த்தைக்கு வந்தது. இருப்பினும், விவசாயிகளிடம் கொள்ளையடித்த நெல்லுக்கான பணத்தைத் தர மறுத்ததால், அவர்களும் முற்றுகையிடப்பட்டு சிறைபிடிக்கப்பட்டனர்.

பின்னர், எடை இயந்திரங்களை பழுது பார்ப்பவர்களை வரவழைத்து இரு எடை இயந்திரங்களும் அதிகாரிகள் முன்னிலையில் சோதிக்கப்பட்டது. இதில், ஒரு மூட்டைக்கு 4 முதல் 8 கிலோவரை எடை மோசடி நடந்திருப்பது நிரூபிக்கப்பட்டதால் அதிகாரிகள் தேள் கொட்டிய திருடனை போல் விழித்தனர். இம்முற்றுகை தொடர்ந்ததால், அதிகாரிகளை விடுவிக்காவிட்டால் வழக்குப் போடுவோம் என போலீசு மிரட்டியது. இதைத் துச்சமாக மதித்து 7.3.2011 அன்று அதிகாரிகள் திருடியதைத் திருப்பி எடுப்போம் என்ற போராட்டத்தை வி.வி.மு. அறிவித்தது.

பின்னர் ஏழாம் தேதி நடந்த பேச்சுவார்த்தையில், 4000 நெல்முட்டைகளையும் எடை போட்டு, விவசாயிகளிடம் கூடுதலாகக் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்குப் பணம் தந்துவிடுவதாக அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். குடிமைப் பொருள் வழங்கு துறையில் பணிபுரியும் பட்டியல் எழுத்தர் ஒருவரையும், பணி ஓய்வு பெற்ற முன்னாள் கண்காணிப்பாளர் ஒருவரையும் இடைத்தரகர்களாக உயரதிகாரிகள் அனுப்பி வைத்தனர். கடைசி இரு நாட்களில் கூடுதலாகக் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்கு மட்டும் பணம் தந்துவிட்டு, ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட அனைத்து நெல் மூட்டைகளையும் ஏற்றிச்செல்லும் திட்டத்தோடு இவர்கள் விவசாயிகளை ஏய்க்க முயற்சித்தனர். 4000 நெல் மூட்டைகளில் மேலே அடுக்கி வைக்கப்பட்டிருந்த முட்டைகளில் 10 மூட்டைகளை மட்டும் எடை போட்டுக் காட்டிவிட்டு, கீழே இருந்த மூட்டைகளில் 2 முதல் 4 கிலோ வரை கூடுதலாக நெல் இருந்ததை மறைக்க இவர்கள் மேற்கொண்ட முயற்சி விவசாயிகளிடம் அம்பலப்பட்டுப் போனதால், இடைத்தரகர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். திருடப்பட்ட நெல்லிற்கு பணம் தராமல், நெல்மூட்டைகள் வெளியேறக்கூடாது என 6 லாரிகளை சிறைபிடித்து வி.வி.மு.வினர் முடக்கினர். இச்செய்தி பரபரப்பாக நாளேடுகள் மற்றும் தொலைக்காட்சிகளில் வெளிவந்து அதிகாரிகளின் கொள்ளை இம்மாவட்டமெங்கும் நாறியது.

அரண்டு போன உயரதிகாரிகள், வி.வி.மு. கோரியபடி 4000 மூட்டைகளுக்கும் ரூபாய் 1 லட்சத்து 70 ஆயிரத்தை குடிமைப் பொருள் வழங்கு துறையின் கொள்முதல் அதிகாரி முன்னிலையில் வி.வி.மு.விடம் அளித்தனர். இதன் மூலம் விவசாயிகளிடம் அதிகாரிகள் அடித்த கொள்ளையில் ஒரு பகுதியை வி.வி.மு. மீட்டது. இப்பணத்தை அனைத்து விவசாயிகளுக்கும் கணக்கிட்டு 14.3.2011 அன்று வி.வி.மு. பிரித்துக் கொடுத்தது. குடிமைப் பொருள் வழங்கு துறையின் வரலாற்றில் அதிகாரிகள் திருடிய பணத்தைத் திரும்பப் பெற்ற முதல் நடவடிக்கை இதுதான்!

இத்தகைய அதிகார வர்க்க ஊழலையும் திருட்டையும் சட்டத்தாலோ, சில மேதைகளின் நடவடிக்கைகளாலோ ஒழித்துவிட முடியாது. மாறாக, உழைக்கும் மக்களை அணிதிரட்டி களத்தில் இறங்கிப் போராடுவதன் மூலம்தான் அதிகாரிகளின் ஊழலை ஒழிக்க முடியும் என்ற உண்மையை இந்தப் போராட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது. அன்னா ஹசாரேவின் மெழுகுவர்த்தி போராட்டத்தையே மாபெரும் புரட்சியாக ஊடகங்களும் நடுத்தர வர்க்கமும் சித்தரித்துவரும் வேளையில், அத்தகையோரால் நினைத்தும் பார்க்க முடியாத போராட்டம் இது. ஏனெனில், இது நக்சல்பாரிகளின் போராட்டம்!

தகவல்: விவசாயிகள் விடுதலை முன்னணி,
விருத்தாசலம் வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுப் பொறுக்குவதில் எதிரெதிர் அணி! கார்ப்பரேட் சேவையில் ஓரணி!!

**வலதுசாரி, இடதுசாரி என்ற வேறுபாடின்றி, அனைத்து ஓட்டுக் கட்சிகளும் கார்ப்பரேட் கொள்ளையர்களின் விசுவாசிகள்தான்.**

கடந்த மார்ச் மாதம் 24-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் எதிர்பாராதவிதமாகத் திடீர்க் கூட்டணியொன்று உருவானது. அன்று, ஓய்வூதிய நிதி ஒழுங்கு மற்றும் வளர்ச்சி ஆணைய மசோதாவை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக அவையின் முன் வைத்தது, காங்கிரசு கூட்டணி அரசு. இம்மசோதா தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதியைப் பங்குச் சந்தையில் முதலீடு செய்வதையும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பைத் தனியார்மயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டது.

அன்று காங்கிரசு கூட்டணியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் அவைக்கு வரவில்லை. அன்று அவைக்கு வந்திருந்த 159 உறுப்பினர்களுள் பெரும்பாலோர் பா.ஜ.க., மற்றும் இடதுசாரி கட்சிகளைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள். இம்மசோதாவை எதிர்த்து வரும் இடதுசாரிக் கட்சிகள் மசோதாவை வாக்கெடுப்புக்கு விட வேண்டும் என்று கோரினார்கள். ஆனாலும், அம்மசோதா அன்று 115 உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஓய்வூதிய மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்து, காங்கிரசுக்குக் கைகொடுத்தனர்.

ஓட்டுப் பொறுக்குவதற்காகத் தங்களை எலியும் பூனையும் போலக் காட்டிக் கொள்ளும் காங்கிரசும் பா.ஜ.க.வும், தனியார்மயம் - தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதிலும், அமெரிக்காவிற்கு விசுவாசமாக நடந்து கொண்டு நாட்டை அடகு வைப்பதிலும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் போலத்தான் செயல்பட்டுவருகின்றன. தனியார்மயம் - தாராளமயம் தீவிரமாக அமலுக்கு வந்த 1990-களுக்குப் பின், மத்தியில் ஆறு முறை ஆட்சிகள் மாறியிருக்கின்றன. இதில், இரண்டு ஆட்சிகள் இடதுசாரிகளின் ஆதரவோடு நடந்தன. எனினும், தனியார்மயம் - தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்த ஆறு அரசாங்கங்களிடையே எந்தவிதமான வேறுபாடும் இருந்ததில்லை. இதனைத் தனியார்மயத்தின் தீவிர விசுவாசியான பிரதமர் மன்மோகன் சிங் பெருமையாகப் பேசி வருகிறார்.

ஒவ்வொரு முறை ஆட்சி மாற்றம் ஏற்படும் பொழுதும், மத்தியில் புதிதாகப் பதவியேற்கும் கூட்டணி ஆட்சி தமக்கு முன்பிருந்த அரசாங்கம் பின்பற்றிய தனியார்மயக் கொள்கைகளையே நடைமுறைப்படுத்துவதோடு, அதனை முன்பைவிடத் தீவிரமாக அமல்படுத்தவும் முயலுகின்றன. உதாரணத்திற்குச் சொன்னால், தற்பொழுது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் ஓய்வூதிய நிதி மசோதா தற்பொழுது பதவியில் இருக்கும் காங்கிரசு கூட்டணி அரசால் தயாரிக்கப்பட்டதல்ல. இம்மசோதா அதற்கு முன்பிருந்த பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் 2003-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இப்படியாக பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் தயாரிக்கப்பட்ட மசோதா, அதன் எதிரியான காங்கிரசு கூட்டணி ஆட்சியில், பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க.வின் ஆதரவோடு நிறைவேறியிருக்

அ.தி.மு.க ஆட்சியின் பொழுது, ஜெர்மன் ஏகபோக கார் தயாரிப்பு நிறுவனமான பி.எம். டபிள்யூ.வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பரிமாறிக்கொள்ளும் ஜெயா. (இடது); தி.மு.க.ஆட்சியில் பிரான்ஸ் நாட்டு மெக்கலின் குழுமத்திற்கும், தமிழக அரசிற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம், மு.கருணாநிதி முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்படுகிறது.





படிப்பகம்

www.padippakam.com

கிறது. இந்தியா - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் மன்மோகன் சிங்கின் ஆட்சியில் கையெழுத்தாகியிருந்தாலும், அவ்வொப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் வாஜ்பாயி பிரதமராக இருந்த காலத்திலேயே இரகசியமாக நடந்துவந்தன என்பதுதான் உண்மை.

இந்து மதவெறிக் கட்சியான பா.ஜ.க., ஓட்டுப் பொறுக்குவதற்காகச் சுதேசி சவடால் அடித்துக் கொண்டிருந்த பொழுதுகூட, தனியார்மயம் - தாராளமயத்திற்கு ஆதரவாகத்தான் செயல்பட்டு வந்தது. காங்கிரசு ஆட்சியாளர்களால் அனுமதிக்கப்பட்ட அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரானை அரபிக் கடலில் தூக்கியெறிவோம் எனச் சவடால் அடித்த பா.ஜ.க., 1998-இல் மத்திய ஆட்சியைப் பிடித்ததும் என்ரானுக்கு இலாப உத்தரவாதம் அளிக்கும் உத்தரவில்தான் முதல் கையெழுத்தைப் போட்டது; காங்கிரசு அரசு காட் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதை எதிர்ப்பதாகச் சவடால் அடித்து வந்த பா.ஜ.க., அவ்வொப்பந்தத்தில் விதித்த நிபந்தனைகளின்படி 400-க்கும் மேற்பட்ட பொருட்களின் மீதான சுங்க வரியைக் குறைத்து, அவற்றின் தாராள இறக்குமதிக்கு அனுமதி அளித்தது; காப்பீடு துறையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது என நரசிம்ம ராவ் ஆட்சியின்பொழுது எதிர்ப்பு தெரிவித்து வந்த பா.ஜ.க., தான் ஆட்சியில் அமர்ந்தவுடன் அத்துறையை இந்தியத் தரகு முதலாளிகளுக்கு மட்டுமின்றி, அந்நிய ஏகபோக நிறுவனங்கள் 40 சதவீதம் அளவிற்கு மூலதனம் போடும் வண்ணம் அத்துறையில் தனியார்மயத்தை அனுமதித்தது. காட் ஒப்பந்தப்படி உருவாக்கப்பட்ட உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைப்படி, இந்தியக் காப்புரிமைச் சட்டத்தில் காங்கிரசின் ஆதரவோடு திருத்தங்களைக் கொண்டு வந்தது. பா.ஜ.க. ஆட்சியில்தான் பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மீது ஆன்லைன் வர்த்தகம் என்ற சூதாட்டத்தை நடத்துவதற்கு முதன்முறையாக அனுமதி தரப்பட்டது.

முந்தைய நரசிம்மராவ் ஆட்சியின் வழியில், மாடர்ன் பிரட், பால்கோ, வீ.எஸ்.என்.எல்., உள்ளிட்ட பல பொதுத்துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு பா.ஜ.க. ஆட்சியில் தனியாருக்கு விற்கப்பட்டன. தொலைதொடர்புத் துறையில் நுழைந்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும், இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனங்களும் அரசுக்குச் செலுத்த வேண்டிய உரிமக் கட்டணத்தைக் குறைக்கும் வண்ணம் புதிய தொலைதொடர்புக் கொள்கை பா.ஜ.க. ஆட்சியில்தான் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கையின்படிதான் 2 ஜி அலைக்கற்றைகளை ஒதுக்கீடு செய்ததாக, அவ்வூழல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருக்கும் ராஜா கூறிவருகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, தனியார்மயம் என்பதுதான் தனது கட்சியின் பொருளாதாரக் கொள்கை என்றும், அதனை காங்கிரசு திருடிக் கொண்டுவிட்டதாகவும் கூறியது, பா.ஜ.க.



மேற்கு வங்க முதல்வர் புத்ததேவுடன்
தரகு அதிகார வர்க்க முதலாளி ரத்தன் டாடா:
பாட்டாளியின் பகையாளியான டாடா, இடது முன்னணியின் கூட்டாளியானார்.

2009-ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக, பா.ஜ.க. கூட்டணியின் பிரதம மந்திரி வேட்பாளரான அத்வானியைச் சந்தித்த அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம், அவர், ''ஏற்கெனவே பின்பற்றப்படும் வெளிநாட்டுக் கொள்கையும், கையெழுத்திடப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் நாங்கள் ஆட்சிக்கு வந்தாலும் தொடரும்'' என உத்தரவாதம் அளித்ததாக வீக்கி லீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்தியிருக்கிறது. ஆக, இவையனைத்தும் தனியார்மயம் - தாராளமயம் என்ற மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைப் பின்பற்றுவதில் மட்டுமல்ல, அமெரிக்காவுக்குச் சேவை செய்வதிலும் பா.ஜ.க.விற்கும் காங்கிரசிற்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது என்பதைத்தான் நிரூபிக்கின்றன.

பா.ஜ.க. தற்பொழுது எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும், அதனின் தனியார்மய விசுவாசம் எள்ளளவும் குறைந்துவிடவில்லை என்பதைத்தான் ஓய்வூதிய மசோதாவுக்கு அக்கட்சி அளித்த ஆதரவு நிரூபிக்கிறது. மேலும், அக்கட்சியைச் சேர்ந்த குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடி, சில்லறை விற்பனையில் அந்நிய நிறுவனங்களை அனுமதிப்பதற்கு ஆதரவு தெரிவித்து பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

காங்கிரசு, பா.ஜ.க.. மட்டுமல்ல, இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து ஓட்டுக்கட்சிகளிடமும் தனியார்மயம் - தாராளமயம் என்ற மறுகாலனியாதிக்கக் கொள்கைக்கு மாற்றாக வேறு கொள்கைகள் கிடையாது. வறுமை, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், விவசாயம் நசிவு ஆகியவை காரணமாக மக்களிடம் எழுந்துள்ள வெறுப்பையும் கோபத்தையும் ஓட்டுக்களாக அறுவடை செய்துகொள்ளத் தான் எதிர்த்தரப்பு முயலுகிறதேயன்றி, அப்பிரச்சினை



படிப்பகம்

www.padippakam.com

களுக்குக் காரணமான தனியார்மயத்தை அம்பலப் படுத்துவதுமில்லை; தாக்கிப் பேசுவதுமில்லை.

> தனியார்மயம் – தாராளமயம் கொண்டு வரும் வளர்ச்சி என்பது வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி என்று முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களே அம்பலப்படுத்திவரும் வேளையில், அந்நிய மூலதனத்தைக் கொண்டு வேலைவாய்ப்பை அதிகரிக்கப் போவதாக சி.பி.எம். கூறுவது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனம் தவிர, வேறல்ல.

தமிழகத்தில் நிலவும் மின் தட்டுப்பாடு பற்றிப் பேசும் அ.தி.மு.க. தலைவி ஜெயா, தமிழகத்தில் இயங்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தடையில்லா மின்சாரம் வழங்கப்படுவதை அம்பலப்படுத்துவது கிடையாது. ஸ்பெக்ட்ரம் ஊழலில் கருணாநிதி குடும்பம் அடைந்த ஆதாயத்தை அம்பலப்படுத்தும் ஜெயா, அவ்வூழலின் முக்கிய புள்ளிகளான டாடா, அம்பானி போன்ற தரகு முதலாளிகளை அம்பலப் படுத்துவது கிடையாது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதாகக் கூறி, விலைவாசி உயர்வை நியாயப்படுத்தினார், மன்மோகன் சிங்கின் கூட்டாளி கருணாநிதி. ஜெயாவோ தனது முந்தைய ஆட்சியின் பொழுது விலைவாசி உயர்வை மக்கள் விழுங்கித் தீர வேண்டிய கசப்பு மருந்தாக வருணித்தார்.

இடதுசாரிக் கூட்டணி, குறிப்பாக சி.பி.எம்., தாம் ஆளும் மேற்கு வங்க மாநிலத்தில் டாடாவிற்காக சிங்கூரிலும், சலீம் குழுமத்திற்காக நந்திகிராமத்திலும் நிலப்பறிப்பில் இறங்கியதைத் தொழில் வளர்ச்சி என்ற பெயரில்தான் நியாயப்படுத்தியது. அமெரிக்க மூலதனத்தின் நலன்களுக்காக, தகவல் - தொழில்நுட்பம் தொடர்பான தொழில்களில் வேலைநிறுத்தம் செய்வது மேற்கு வங்க மாநிலத்திலும் தடை செய்யப் பட்டுள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்கள் சில்லறை விற்பனையில் நுழைவதை எதிர்ப்பதாகக் கூறும் இடதுசாரிக் கூட்டணி, கேரளாவில் இத்தாராளமயத்தை அனுமதித்துள்ளது. அம்மாநிலத்தில் சில்லறை விற்பனையில் இறங்கியிருக்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது கூடுதல் வரி விதித்திருப்பதைக் காட்டி, இத்துரோகத்தை நியாயப்படுத்துகிறது, இடதுசாரிக் கூட்டணி ஆட்சி. அமெரிக்காவுடன் மன்மோகன் சிங் அரசு போட்டுக் கொண்ட இராணுவ மற்றும் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அடையாள எதிர்ப்புக் காட்டி வந்த இடதுசாரிக் கூட்டணி. தாம் ஆளும் மேற்கு வங்க மாநிலத்தில் அமெரிக்க இராணுவ விமானப் பயிற்சி நடத்த அனுமதித்தது. எனவே, இடதுசாரிக் கூட்டணிக் கட்சிகளின் தனியார்மய - தாராளமய எதிர்ப்பு, மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்பது போன்ற பித்தலாட்டத்தனம் நிறைந்ததுதான்.

அமெரிக்காவின் கருவூலச் செயலர் ஹென்றி பால்சனை அக்டோபர் 2007-இல் சந்தித்த புத்ததேவ், ''உலகமயத்திற்கு ஏற்ப கம்யூனிஸ்டுகள் மாறிக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால், அழிய வேண்டியதுதான்'' எனக் கூறியதாக விக்கி லீக்ஸ் இணையதளம் அம்பலப்படுத்தியிருக்கிறது. இது மட்டுமின்றி, அச்சந்திப்பின்பொழுது, போபால் விஷவாயுப் படுகொலைக்கு காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்தை வாங்கியுள்ள அமெரிக்காவின் டௌ கெமிக்கல்ஸ் நிறுவனம், தமது மாநிலத்தின் இரசாயனத் தொழில்களில் முதலீடு செய்வதற்கு எந்தவித் தடையும் கிடையாது எனக் கூறியதாகவும் அவ்விணைய தளம் அம்பலப்படுத்தியிருக்கிறது. இதனால்தான், ''புத்ததேவிடமிருந்து இடதுசாரிகள் கற்றுக் கொள்ள வேண்டும்'' என மன்மோகன் சிங் பாராட்டுத் தெரிவித்தார் போலும்.

மேற்கு வங்க மாநில முதல்வர் புத்ததேவ் மட்டும் உலகமயத்திற்கு ஆதரவாகப் பேசவில்லை. சி.பி.எம். கட்சியின் 18 - ஆவது காங்கிரசிலேயே அந்நிய நிதி மூலதனத்திற்கு ஆதரவாகத் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. ''இன்றைய தாராளமய - உலகமய சூழலின் யதார்த்த நிலைமையை உணராமல், அதிலிருந்து தப்பித்துவிட முயற்சிப்பது நமது அகநிலை விருப்பமாகவே இருக்கும். வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழில்களில் அந்நிய நேரடி முதலீட்டை நாம் அனுமதிக்கலாம்'' எனத் தனியார்மயம் - தாராளமயத்திற்கு ஏற்ப தமது கொள்கையை மறுவார்ப்பு செய்துள்ளனர்.

சி.பி.எம். மட்டுமல்ல, மன்மோகன் சிங், கருணாநிதி வகையறாக்கள்கூட, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி எனக் கூறித்தான் அந்நிய மூலதனத்திற்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வருகிறார்கள். தனியார்மயம் - தாராளமயம் கொண்டு வரும் வளர்ச்சி என்பது வேலைவாய்ப்பற்ற வளர்ச்சி என்று முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களே அம்பலப்படுத்தி வரும் வேளையில், அந்நிய மூலதனத்தைக் கொண்டு வேலைவாய்ப்பை அதிகரிக்கப் போவதாக சி.பி.எம். கூறுவது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனம் தவிர, வேறல்ல.

''அந்நிய மூலதனத்திற்குத் தாராள சலுகைகள் வழங்குவதன் மூலம்தான் நாட்டின் தொழில் வளர்ச்சியைச் சாதிக்க முடியும்'' என்பதில் மட்டும் இந்த ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கவில்லை; இந்தக் கொள்கையை எதிர்ப்பவர்களை, அதன் மக்கள் விரோதத் தன்மை உட்பட அக்கொள்கை ஏற்படுத்தும் அனைத்துக் கேடுகளையும் அம்பலப் படுத்துபவர்களை, வளர்ச்சிக்கு எதிரானவர்கள், மாவோயிச ஆதரவாளர்கள், பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி ஒடுக்குவதிலும் இந்தக் கட்சிகளுக்கு இடையே எவ்வித வேறுபாடும் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒரிசாவில் போஸ்கோவிற்கு எதிராகப் போராடுபவர்களை பா.ஜ.க. - பிஜூ ஜனதா தளம் கூட்டணி ஆட்சி அரசு பயங்கரவாதத்தை ஏவி ஒடுக்கி வருகிறது. சத்தீஸ்கரில் மாவோயிஸ்டுகளையும், அவர்களை ஆதரிக்கும் பழங்குடியின மக்களையும் ஒடுக்க அரசுப் படைகளும், சல்வா ஜூடும் என்ற கூலிப்படையும் இறக்கிவிடப் பட்டுள்ளன. இம்மாநிலத்தில் இவர்களை ஒடுக்குவதில் காங்கிரசும், பா.ஜ.க.வும் கைகோர்த்துக் கொண்டுள்ளன. மேற்கு வங்க மாநிலத்தில் லால்கார் பகுதியில் மாவோயிஸ்டுகளோடு இணைந்து போராடி வரும் பழங்குடியின மக்களை ஒடுக்க காங்கிரசுடன் இணைந்து காட்டு வேட்டையை நடத்தி வருகிறது, சி.பி.எம்.

பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் போன்று திராவிடம், தலித்தியம் பேசும் உதிரி ஓட்டுக்கட்சிகள்கூட தமது சுயநல, பிழைப்புவாதத்திற்காக இம்மறுகாலனியாதிக்கக் கொள்கைகளோடு சமரசம் செய்து கொண்டு விட்டன. குறிப்பாக, தலித்திய வாதிகள் தனியார்மயத்தைத் தாழ்த்தப்பட்டோரை விடுவிக்க வந்த பொருளாதாரக் கொள்கையாகச் சித்தரித்து வருகின்றனர்.

சுருக்கமாகச் சொன்னால், ஓட்டுக்கட்சிகளிடையே தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாட்டை அமெரிக்காவின் மறுகாலனியாக்குவதில் எவ்விதக் கொள்கை வேறுபாடும் கிடையாது. அதை யார் தலைமையில் செய்வது, எப்படிச் செய்வது என்பது மட்டும்தான் அவர்களுக்கு இடையேயான வேறுபாடு. தனியார்மயம் என்ற பெயரில் நடந்து வரும் கார்ப்பரேட் பகற்கொள்ளையில் தாமும் பங்கு போட்டுக் கொள்வது குறித்துத்தான் அவர்கள் முரண்பட்டு மோதிக் கொள்கிறார்கள். இதற்காகத்தான், அக்கட்சிகள் இரண்டு அணியாகவோ, மூன்று அணியாகவோ பிரிந்து நின்று தேர்தல்களைச் சந்திக்கிறார்களே யொழிய, கொள்கை வேறுபாடுகளால் அல்ல.

● குப்பன்

# ஓட்டுண்ணிக் கட்சிகளின் கையறு நிலை

**இடது-வலது போலிகள் மற்றும் தலித்திய-தமிழினக் கட்சிகள்/குழுக்களின் ஓட்டாண்டித்தனம் தேர்தலுக்குத் தேர்தல் அம்பலமாகி வருகிறது.**

நடந்து முடிந்த தமிழக மற்றும் புதுவை சட்டப்பேரவைகளுக்கான தேர்தல்கள் போலி கம்யூனிசக் கட்சிகள், தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்கள் / கட்சிகள், சாதிய - சமூக நீதிக் குழுக்கள் / கட்சிகள், மற்றும் தலித் குழுக்கள் / கட்சிகள் ஆகிய வற்றின் ஓட்டாண்டித்தனத்தையும் பொருத்தப்பாடின்மையையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

இத்தேர்தல்களில் நேரடியாகப் பங்கேற்றவை மட்டுமல்ல; இவற்றில் பங்கேற்காத, ஓரங்கட்டப்பட்டு, ஒதுக்கப்பட்டு, தேர்தல்களைப் புறக்கணிக்கும்படி தள்ளப்பட்ட மேற்படி வகைக் குழுக்கள் / கட்சிகள்கூடத் தமது சுயத்தையும் சுயமரியாதையையும் பறிகொடுத்து மக்கள் முன்பு அம்மணமாக நின்றதைக் கண்டோம்.

அரசியல் என்றாலே முதலாளிய ஓட்டுச்சீட்டு அரசியல் என்ற வரம்புக்குள் தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டுள்ள இந்தக் குழுக்கள் / கட்சிகள் தங்கள் நீண்டகால அல்லது குறுகியகால அரசியல் நடைமுறையில் செக்குமாடுகளைப் போலாகிவிட்டன. அதனால், இவை சுயசிந்தனை, சுயபரிசீலனை யற்றவைகளாகி, மாற்று அரசியல் பாதை பற்றிய எண்ணமே இல்லாத மலடுகளாகிப் போயுள்ளன.

எந்தவொரு இயக்கமும் பாரிய பின்னடைவுக்குள்ளானாலும் அல்லது தொடர்ந்து முன்னேற முடியாமல் நீண்டகாலத் தேக்கத்தில் சிக்கி மெல்ல மெல்லத் தேய்ந்து வந்தாலும், அது தனது நிலையை சுயபரிசீலனை செய்ய வேண்டும். தான் மேற்கொண்ட பாதையையும் கொள்கையையும் மீளாய்வு செய்து மறுபரிசீலனைக்குள்ளாக்க வேண்டும். இயக்கத்தின் இந்நிலைக்குக் காரணமானவர்களை விமர்சனக் கேள்விகளால் வாட்டி எடுக்கவேண்டும். தக்க அரசியல் - அமைப்பு மாற்றங்களால் இயக்கம் இழப்புகளை ஈடுகட்டிக் கொள்ள வேண்டும்.

போலி கம்யூனிஸ்டு கட்சிகளைப் பொருத்தவரை பின்னடைவு, தேக்க நிலையை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. 1950-களின் முதன்மையான எதிர்க்கட்சி என்ற நிலையிலிருந்த ஐக்கியப்பட்டிருந்த போலி கம்யூனிஸ்டு கட்சிகள், பிளவுக்கு முன்பே அந்த நிலையை தி.மு.க.விடம் பறிகொடுத்து விட்டன. 1970-களில் எம்.ஜி.ஆர். தனிக் கழகம் நிறுவிக் கொண்ட பிறகு, நான்காம் நிலை, ஐந்தாம் நிலைக்குப் போலி கம்யூனிச கட்சிகள் தள்ளப்பட்டன. அதன்பிறகு ராமதாசின் பா.ம.க; மூப்பனாரின் த.மா.க; வைகோவின் ம.தி.மு.க; கடைசியாக விஜயகாந்தின் தே.மு.தி.க; என்று புதுப்புது தலைமைகளும் கட்சிகளும் அவதாரம் எடுத்தபோதெல்லாம் அடுத்தடுத்து போலி கம்யூனிஸ்டு கட்சிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ராமமூர்த்தி, பாலதண்டாயுதம் போன்ற ''தலைமறைவு வாழ்க்கைத் தியாகிகளைக் கொண்ட கட்சி'' என்ற பழம்பெருமையுடன் கூட்டணி பேரம் நடத்துவதற்குக் கூட, பிற கட்சிகள் மதிக்கக் கூடிய தலைமையையும் இழந்துவிட்டன.

இப்போது போலி கம்யூனிசக் கட்சிகளின் தலைமையும் சரி, அணிகளும் சரி போர்க்குணமிக்க மக்கள் திரள் இயக்கங்கள் வழியே புடம்



படிப்பகம்

www.padippakam.com

போட்டு, சிறப்புத் திறமை வாய்ந்தவர்களாகத் தம்மை நிலைநாட்டிக் கொண்டவர்கள் இல்லை. நட்சத்திரக் கலை இரவுகள், விளையாட்டுப் போட்டிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் திரட்டப்பட்டு, பிழைப்புவாத அரசியலில் பயிற்சியளிக்கப்பட்டு, இன்னுமிரு தாராளமயக் கட்சிகளாக இக்கட்சிகள் மாறிவிட்டன. கம்யூனிஸ்டு கட்சி என்றால் கட்டுப்பாடுமிக்கது என்பது மாறி, அதிகாரபூர்வ வேட்பாளருக்கு எதிராக அடிவெட்டு வேலைகள், போட்டி வேட்பாளர்கள், அடிதடி-குத்துவெட்டு,இலஞ்ச-ஊழல், துரோகம், கட்சிதாவுதல் ஆகியன அக்கட்சிகளுக்குள் மலிந்து விட்டன.

> **இப்போது போலி கம்யூனிசக் கட்சிகளின் தலைமையும் சரி, அணிகளும் சரி, போர்க்குணமிக்க மக்கள்திரள் இயக்கங்கள் வழியே புடம்போட்டு, சிறப்புத் திறமை வாய்ந்தவர்களாகத் தம்மை நிலைநாட்டிக் கொண்டவர்கள் இல்லை.**

வர்க்கப் பார்வையற்ற ஓட்டுக்கட்சி அரசியலுக்குள் மூழ்கிப் போய், ஆளுங்கட்சிகள் வீசி எறியும் எலும்புத் துண்டுக்கு விசுவாசமாக வாலை ஆட்டிக் கொண்டு அடுத்தடுத்த தேர்தல்களுக்கு அணிமாறும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதக் கட்சிகளாகி விட்டன. இப்படியே அரை -ற்றாண்டு கால சந்தர்ப்பவாத ஓட்டுக் கட்சி அரசியலில் ஊறித் திளைக்கும் போலி கம்யூனிஸ்டு கட்சிகள், இடதுசாரி ஜனநாயகக் கூட்டணி அமைப்பது என்ற இலக்கை அடியோடு மறந்துவிட்டு, பார்ப்பன - பாசிசக் கட்சிகளுக்கு வால் பிடித்துச் செல்வதே, அவற்றின் மறுபரிசீலனையற்ற நடைமுறையாகி விட்டது. தாம் ஆளும் மாநிலங்களைத் தொழில்மயமாக்குவதே இலட்சியமெனச் சொல்லிக் கொண்டு ஏகாதிபத்திய உலகமயமாக்கம், தனியார்மயம், தாராளமயக் கொள்கையை அப்பட்டமாகத் தாங்கிப் பிடிக்கும் கட்சிகளாகி விட்டன. சின்னம், கொடி, சிகப்பு நிறம் ஆகிய அடையாளங்களில் மட்டுமே பிற ஓட்டுக்கட்சிகளில் இருந்து வேறுபட்டவைகளாக உள்ளன.

தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்தனி உட்பிரிவுகளை மட்டுமே சமூக அடிப்படைகளாகக் கொண்டவைதாம் தலித்தியக் குழுக்கள் / கட்சிகள். இவற்றின் தலித்திய அடையாளம் தவிர, பிற எல்லா சாதிய - சமூக நீதிக் குழுக்கள் / கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்கள்/ கட்சிகள் அனைத்தும் ஏறக்குறைய ஒரே அரசியலை அடிப்படையாகக் கொண்டவை. சிறு முதலாளிய பிழைப்புவாதமே இந்தக் குழுக்கள் / கட்சிகளின் சமூக மற்றும் அரசியல் அடிப்படையாக உள்ளன. இவை முன்வைக்கும் சமூக நீதி - இடஒதுக்கீடு, மொழி, இனஉரிமை ஆகிய கோரிக்கைகள் மற்றும் முழக்கங்கள் ஏற்கெனவே பல ஆண்டுகளாக ஆளும் திராவிடக் கட்சிகளின் அரசியல் ''ஆயுதங்களாக''க் கையிலெடுக்கப்பட்டுக் கேடாகப் பயன்படுத்தப்படுபவைதாம்.

ஆளும் திராவிடக் கட்சிகளிலேயே அந்தந்த சாதிப் பிரதிநிதிகள் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் இடம் பிடித்துவிடும் நிலையில் இராமதாசு, சரத்குமார், கார்த்திக், கொங்கு ஈஸ்வரன், திருமா, கிருஷ்ணசாமி, சேதுராமன் போன்றவர்கள் தனித்தனிக் கட்சி வைத்து அரசியல் நடத்துவதன் அவசியம் ஏதுமில்லை. கருணாநிதி, ஜெயலலிதாவின் பிரதியைப் போன்று செயல்படும் வைகோவின் ''மறு மலர்ச்சி''க்கு அவசியம் ஏதுமில்லை. இருந்தபோதும், சரிந்துவரும் செல்வாக்கு, தோல்வி பயம் காரணமாகவும் கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் காட்டுவதற்காகவும்

ஓட்டுப் பொறுக்குவதற்காக தி.மு.க.விற்கும், அ.தி.மு.க.விற்கும்
மாறிமாறிக் காவடி தூக்கும் சி.பி.எம்., மற்றும் சி.பி.ஐ., கட்சித் தலைமை. (கோப்புப் படம்)





படிப்பகம்

www.padippakam.com

ஆளும் திராவிடக் கட்சிகள் சில எலும்புத் துண்டுகளை வீசுகின்றன.

ஈழ விடுதலைப் போராட்டம், அதற்கு ஆதரவாகத் தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி இவற்றின் துணைவிளைவாக உருவானவைதாம் தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்கள் / கட்சிகள். இந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, இந்திய தேசியக் கற்பிதத்துக்கு எதிரான தமிழ்த் தேசிய இனவிடுதலை என்று அவ்வப்போது இந்தக் குழுக்கள் / கட்சிகள் முழங்கி வந்தாலும், ஈழவிடுதலைப் புலிகளின் குறிப்பாக, பிரபாகரனின் துதிபாடிகளாகவே மாறிப் போனார்கள். ''இந்தியாவிலிருந்து தமிழ் தேசிய இன விடுதலை'' என்பது இவர்களின் இலட்சியமாகவும் முதன்மை நடைமுறையாகவும் ஒருபோதும் இருந்ததில்லை. எனவேதான், காஷ்மீர் மற்றும் வடகிழக்கு இந்தியாவில் நாம் கண்ட இனவிடுதலைப் போராட்டங்களைப் போல போர்க்குணமிக்கதாக ஒருபோதும் எழுச்சியுறவில்லை.



நடிகர் விஜய், ஈழத் தமிழினப் படுகொலையைக் கண்டித்து நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட சி.பி.ஐ.யின் தா.பாண்டியன் (வலது ஓரம்) மற்றும் நெடுமாறன் (வலமிருந்து நான்காவது). ஓட்டுப் பொறுக்க சினிமா கவர்ச்சியையும் பயன்படுத்தத் தயங்காத ஓட்டுண்ணிகள். (கோப்புப் படம்)

இராமதாசு, வைகோ, திருமா; ஆகியோரின் தமிழ்த் தேசிய இனவாதம் ஆளும் திராவிடக் கட்சிகளின் பிரதியைப் போன்றதாகவும் ஓட்டுக்கட்சி அரசியலுக்குத் தகவமைக்கப்பட்டதாகவும் அமைந்துள்ளது. இப்போது தேர்தலில் பங்கேற்காத அல்லது புறக்கணிக்கும் தமிழ்த் தேசிய இனக் குழுக்கள் /கட்சிகளை நடத்தும் நெடுமாறன், மணியரசன் போன்றவர்கள்கூட தொடக்கத்தில் தேர்தல் அரசியலில் முயன்று, வாக்காளர்கள் ஆதரவின்றி வெளியேற்றப்பட்டவர்கள் அல்லது வெளியேறியவர்கள்தாம்.

இந்திய அரசுகளும் ஆளும் வர்க்கங்களும் தமது தெற்காசியத் துணை மேலாதிக்கம் மற்றும் விரிவாக்க நலன்களுக்குப் பொருத்தமாகத்தான் ஈழ - இலங்கைப் பிரச்சினைகளை அணுகி வந்திருக்கின்றன. இந்த உண்மையை நாம் பலமுறை இடித்துரைத்தும் இந்திய ஆளும் வர்க்கங்களையும் அரசுகளையும் ''தாஜா'' செய்து ஈழ ஆதரவைப் பெறும் அணுகுமுறையையே புலிகளும் இந்தியத் தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்களும் / கட்சிகளும் மேற்கொண்டு வந்தனர். முக்கியமாக, இந்தியத் தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்களும் /கட்சிகளும் ஓட்டுக்கட்சி அரசியலுக்குத் தகவாகவே தமது நடைமுறையை வகுத்துக் கொண்டுள்ளன. இறுதி ஆய்வில், சட்டவாதமும் பிழைப்புவாதமுமே இவர்களின் வழிகாட்டும் நெறிமுறையாக உள்ளன. அதாவது, சிறுமுதலாளிய இருப்புக்கு ஏற்பவே அரசியல், நடைமுறை, இயக்கம் என்று வரம்பிட்டுக் கொண்டுள்ளன.

எனவேதான், தாம் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள தமிழ்த் தேசிய இன விடுதலையைச் சாதிப்பதற்காகத் தேர்தல் அரசியலுக்கு வெளியே மாற்றுப் பாதையை வகுத்துக் கொண்டு செயல்படுவதை விடுத்து, ஏதாவது ஒரு அணி/கட்சியை நிராகரிப்பது அல்லது எதிர்மறையில் ஏதாவது ஒரு கட்சி / அணியை ஆதரிப்பது; அதுவும் முடியாதபோது, 49-ஓவைப் போடச் சொல்லிச் சரணடைவது என்று இருட்டிலே அலைகின்றன. தேர்தல் அரசியலைப் புறக்கணிக்கும்படி அறைகூவும் குழு / கட்சி கூட தேர்தல் ஆணையம் சரியான, ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றுமாறு ஆலோசனைகள் - எதிர்பார்ப்புகளைக் கூறுகின்றன.

மொத்தத்தில் வைகோ மட்டுமல்ல, போலி கம்யூனிஸ்டு கட்சிகள், சாதிய - சமூகநீதிக் கட்சிகள், தலித்தியக் கட்சிகள் / குழுக்கள் மற்றும் தமிழ்த் தேசிய இனவாதக் குழுக்கள் / கட்சிகள் ஆகிய அனைத்தும் கையறுநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை நடந்து முடிந்த தேர்தல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

● ஆர்.கே.




விலை: ரூ.55.00

நூல் புதிது!

பகவத் கீதை

முரண்களும் காலத்திற்கொவ்வாத கருத்துகளும்

கதை போலத் தொடங்கி பார்ப்பன மனு நீதியைக் கட்டளையாய் நம்மீது நிறுவும் பகவத் கீதையின் நுட்பங்களை உடைத்தெறியும் நூல்.

நூலினை அஞ்சலில் பெற நூல் விலையுடன் ரூ.30 சேர்த்து பணவிடை அனுப்பவும்.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை- 600002. தொலைபேசி: 044-2841 2367




படிப்பகம்

www.padippakam.com

# உடுக்கையடிக்கும் பத்திரிகைகள் சாமியாடும் தேர்தல் ஆணையம்

**தேர்தல் ஆணையத்தின் கெடுபிடிகளை நடுநிலையான, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளாகப் பார்க்க முடியுமா?**

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தேர்தல் ஆணையத்தின் கடும் நடவடிக்கைகளால் சுதந்திரமான - நியாயமான தேர்தல் நடந்துள்ளதாகவும், அதனாலேயே தமிழகத்தில் இதுவரை கண்டிராத அளவுக்கு பெருமளவில் வாக்குப்பதிவு நடந்துள்ளதாகவும் பார்ப்பன ஊடகங்களும் எதிர்க்கட்சிகளும் சித்தரிக்கின்றன.

யாருமே உரிய ஆவணங்கள் இல்லாமல் இரண்டு லட்ச ரூபாய்க்கு மேலாக ரொக்கமாக பணம் - நகைகள் எடுத்துச் செல்ல முடியாது என்பதிலிருந்து, வாக்காளர்களுக்கு இலவச அன்பளிப்புகள் வழங்க முடியாது என்பது வரை தேர்தல் ஆணையத்தால் நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டன. சுவர்களில் வரையப்பட்ட சின்னங்கள், தலைவர்களின் படங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அரசியல் தலைவர்களின் சிலைகள் தேர்தல் வரை மூடிவைக்கப்பட்டன. இதுவரை எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவுக்கு போலீசு டி.ஜி.பி.க்கள் முதல் மாவட்ட ஆட்சியர் - உயர் போலீசு அதிகாரிகள் வரை பலர் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் விளம்பரங்கள் வெளியிடுவது, தொண்டர்களுக்குத் தேநீர் வாங்கித் தருவது உள்ளிட்டு வேட்பாளர்களின் தேர்தல் செலவுகள் கண்காணிக்கப்படும் என்று கெடுபிடிகள் அறிவிக்கப்பட்டன.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க பார்வையாளர் குழு, ஒவ்வொரு தொகுதியிலும் வீடியோ கண்காணிப்புக் குழு, தேர்தல் செலவுகளைக் கண்காணிக்க பறக்கும் படைகள், சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புப் படைகள் அமைக்கப்பட்டு, மாவட்ட - மாநில குழுக்களின் ஒப்புதல் பெற்ற பிறகே விளம்பரங்களை வெளியிட வேண்டும் என்று தேர்தல் நடத்தை விதிகள் கடுமையாக்கப்பட்டன.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தேர்தல் ஆணையம் இப்படி கெடுபிடி செய்ய என்ன காரணம் என்று கேள்வி எழுப்பினார், கருணாநிதி. ''தேர்தல் என்றால் ஒரு மாதத்திற்கு முன்பே திருவிழா போல களைகட்டிவிடும்; ஆனால் இப்போது தேர்தல் கமிசனின் கெடுபிடியால் அது களையிழந்து விட்டது'' என்றும், ''மினி எமர்ஜென்சி அறிவிக்கப்பட்டுள்ளது'' என்றும் அவர் குற்றம் சாட்டினார். மாநிலத்தின் உயர் அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமுன்னர், மாநில அரசை தேர்தல் ஆணையம் கலந்தாலோசிக்கவில்லை என்று அவர் குற்றம் சாட்டிய போதிலும், விதிகளின்படி இத்தகைய ஆலோசனைகள் தேவையற்றவை என்று திமிராக பதிலளித்தது தேர்தல் ஆணையம்.

மேலும், தேர்தல் முடிந்து விட்ட பின்னரும் வாக்கு எண்ணிக்கை முடியும் வரையிலும் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசு அதிகாரிகள் சில முக்கிய ஆய்வுக் கூட்டங்களைக்கூட நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வரும் ஜூன் மாதத்தில் தென்மேற்குப் பருவ மழை தொடங்கும் நிலையில், அதற்கேற்ப வேளாண் துறையில் உரிய முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். அத்தகைய ஆய்வுக் கூட்டங்களைக்கூட நடத்தக் கூடாது என்கிறது தேர்தல் ஆணையம். ''தமிழகத்தில் நடப்பது எனது ஆட்சியா அல்லது தேர்தல் ஆணையத்தின் ஆட்சியா?'' என்று கருணாநிதி வெளிப்படையாகவே கேள்வி எழுப்பி, ''நிர்வாகம் ஸ்தம்பித்துப் போனால் அதற்கு தேர்தல் ஆணையம்தான் பொறுப்பு'' என்று அறிக்கை வெளியிடும் அளவுக்கு தேர்தல் ஆணையத்தின் எல்லையற்ற அதிகாரம் கொடிகட்டிப் பறந்தது.

இருப்பினும், ஓட்டுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்கவே தேர்தல் ஆணையம் கெடுபிடிகளை விதிப்பதாகவும், அதனாலேயே தி.மு.க.வும் கருணாநிதியும் அலறுவதாகவும் ஜெயா ஆதரவு பார்ப்பன ஊடகங்கள் கொச்சைப்படுத்திக் கேலி செய்தன.

எதிர்க்கட்சிகள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் பார்ப்பன ஊடகங்களின் நாயகன்: தமிழகத் தேர்தல் ஆணையர் பிரவீண் குமார்.





படிப்பகம்

www.padippakam.com



வாகனச் சோதனையில் கைப்பற்றப்பட்ட பணக்கட்டுகளுடன் தேர்தல் ஆணைய அதிகாரிகள்: பணப்பட்டுவாடாக்களைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுத்துக் கடமையாற்றுவதாகக் காட்டி ஏய்க்கும் நாடகம்.

தேர்தல் ஆணையம் தனது கடமையை பாரபட்சமின்றி செய்வதைப் பாராட்டாமல், அதிகப்படியான கெடுபிடிகள் காட்டுவதாக கருணாநிதி கூறுவது ஆச்சரியமளிக்கிறது, என்றது தினமணி. அனைத்து முதலாளித்துவ ஓட்டுக் கட்சிகளும் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தாலும் தி.மு.க. மீது மட்டும் குறிவைத்து பார்ப்பன ஊடகங்கள் குற்றம் சாட்டின. தேர்தல் முடிந்த பின்னர் ஜெயலலிதா விடுக்கும் அற்பத்தனமான ஆதாரமற்ற அவதூறு அறிக்கைகளைக்கூட ஊதிப் பெருக்கி, இடைப்பட்ட ஒரு மாத காலத்தில் தி.மு.க. எதிர்ப்புப் பிரச்சாரத்தை இந்த ஊடகங்கள் நடத்துகின்றன.

''தேர்தல் ஆணையத்தின் கடுமையான நடத்தை விதிகளால், தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில் தேர்தல் கட்சிகளின் ஆடம்பரங்களும் ஆட்டம்பாட்டங்களும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. பணப்பட்டுவாடா கட்டுப்படுத்தப்பட்டது, சுவரொட்டி, பேனர், கொடிகள் தோரணங்களுக்குத் தடை, பரிசு வழங்கத் தடை , வாக்காளர்களைக் கவர்வதற்கான நடவடிக்கைகளுக்குத் தடை முதலான நடவடிக்கைகள் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இது தேர்தல் கமிசனுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. கத்தியின்றி, ரத்தமின்றி, ஒரு அமைதிப் புரட்சி நடந்துள்ளது. அதன் காரணமாகவே அதிக அளவில் வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களித்துள்ளனர்'' என்று ஆளும் வர்க்க ஊடகங்கள்தேர்தல் ஆணையத்தின் கெடுபிடிகளை வரவேற்று ஆதரிக்கின்றன. பா.ஜ.க.வும் அ.தி.மு.க. கூட்டணிக் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தின் கெடுபிடிகளை நியாயமான பாரபட்சமில்லாத நடவடிக்கைகளாகச் சித்தரிக்கின்றன.

தேர்தல் ஆணையத்தின் கெடுபிடியால் பணப்பட்டுவாடா தடைப்பட்டு வாக்காளர்கள் உற்சாகத்துடன் வந்து வாக்களித்ததாக இந்த ஊடகங்கள் பூரிப்புடன் செய்தி வெளியிட்டன. தேர்தல் முடிந்ததும் இப்போது இதே பத்திரிகைகள், பணப்பட்டுவாடா இரவு நேரத்தில் கன ஜோராக நடந்தது என்றும், எல்லோர் கையிலும் காந்தி சிரித்துக் கொண்டிருந்தார் என்றும் எழுதுகின்றன. வாக்கு எண்ணிக்கையை ஒரு மாத காலத்துக்குத் தள்ளி வைக்க எவ்வித நியாயமான காரணமும் இல்லாத போதிலும், ஜனநாயகத்தை நிலைநாட்ட இதுவும் தவிர்க்கவியலாத அவசியம் என்று நியாயப்படுத்தின.

தேர்தல் ஆணையத்தின் நடத்தை விதிகள் எந்த விதத்திலும் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதையோ, பிரியாணி விருந்து -அன்பளிப்புகள் அளிப்பதையோ, ஆட்சிக்கு வந்தால் இலவசங்களை வாரி வழங்குவோம் என்று மக்களை ஈர்ப்பதையோ, சாதிய உணர்வுகளைத் தூண்டுவதையோ, ரவுடித்தனத்தையோ தடுக்கவில்லை. அவை வழக்கம் போல கன ஜோராகத் தான் நடந்துள்ளன. கடந்த 2009 நாடாளுமன்றத் தேர்தலிலும், குறிப்பாக திருமங்கலம் இடைத்தேர்தலிலும் தேர்தல் ஆணையத்தின் நடத்தை விதிகள் செல்லாக் காசாகிப் போனதை நாடறியும். தேர்தல் நடத்தை விதிகளை மீறிவிட்டதாக அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் மீது வழக்குகள் பதிவாவதும், தேர்தல் முடிந்த பின்னர் அந்த வழக்குகளை அப்படியே கைகழுவுவதும்தான் நடக்கிறது. இதற்காக யாரும் இதுவரை தண்டிக்கப்படுவதோ, பதவி பறிக்கப்படுவதோ நடப்பதில்லை.

வேட்பாளர் இவ்வளவுதான் செலவு செய்ய வேண்டும் என்று தேர்தல் கமிசன் வரையறுத்துள்ளது. ஒரு வேட்பாளர் தொகுதி முழுக்க வாகனத்தில் சுற்றிவருவதற்கான டீசல் செலவுக்குக்கூட அந்தத் தொகைபோதாது என்பது தேர்தல் ஆணையத்துக்கும் தெரியும். வேட்பாளருக்கும் தெரியும். ஆனாலும் தேர்தல் கமிசனின் விதிப்படி செலவுகளைச் செய்துள்ளதாகவும், தாங்கள் யாருக்கும் பணப்பட்டுவாடா செய்யாததைப் போலவும் வேட்பாளர்கள் கணக்கு காட்டி ஏய்க்கின்றனர். தேர்தல் ஆணையமும் இதை ஏற்கிறது. தேர்தல் ஆணையம் சூரத்தனம் காட்டுவதும் ஓட்டுக் கட்சிகள் பம்முவதுமான இந்தக் கோமாளிக் கூத்து தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது.

அப்படியானால் தேர்தல் ஆணையம் இவ்வளவு கெடுபிடிகளைக் காட்டுவதன் நோக்கம்தான் என்ன?

இன்று தேர்தலில் ஒருவர் வேட்பாளராக நிற்க வேண்டுமென்றால் குறைந்த பட்சம் ரூ.5 கோடி செலவழிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற நிலைமை தான் உள்ளது. நேரடியாகவும் தங்களது பினாமிகள் மூலமும் சுயநிதிக் கல்லூரி, ரியல் எஸ்டேட், மணல் திருட்டு, கார்ப்பரேட் மருத்துவமனைகள் நடத்தும் கோடீசுவரர்களைத்தான் எல்லா ஓட்டுக் கட்சிகளும் வேட்பாளர்களாக நிறுத்துகின்றன. மறுபுறம், முதலாளிகளே இன்று நேரடியாக அரசியல்வாதிகளாகவும் மாறியுள்ளனர். இதற்கேற்ப கோடீசுவரர்களுக்கு மட்டுமே உரித்தானதாக, பரந்து பட்ட உழைக்கும் மக்களை தேர்தல் அரசியலிலிருந்து விலக்கி வைப்பதாக தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com



தேர்தலுக்குப் பின் வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் துணை இராணுவப் படையின் பாதுகாப்பு உள்ளிட்டு நான்கு அடுக்கு பாதுகாப்பு: ஓட்டுச்சீட்டு ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் முயற்சி.

நடத்தை விதிகள் மாற்றப்பட்டுள்ளன. முன்பெல்லாம் சாமானிய மக்கள் பங்கேற்கக்கூடிய அவர்களாலேயே மேற்கொள்ளக் கூடிய எளிய பிரச்சார முறைகள் இருந்தன. ஆனால் இப்போது கோடீசுவரர்கள் மட்டுமே பங்கேற்கக் கூடிய தேர்தல் என்பதால், தொலைக்காட்சி பிரச்சாரம், விளம்பரம், கார்களில் பவனி - என இவற்றுக்கெல்லாம் ஆற்றல் கொண்டவர்களுக்கு ஏற்ப தேர்தல் பிரச்சார முறையும் மாறிவிட்டது. உழைக்கும் மக்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது ஒரே வேலை வாக்களிப்பது மட்டுமானதாக மாற்றப்பட்டுள்ளது.

தனியார்மயம் - தாராளமயக் கொள்கையுடன் நாடும் மக்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்படுத்தப்பட்டுவரும் நிலையில், இத்தகைய மறுகாலனியாக்கச் சித்தாந்தப்படி, அரசுக்கும் மக்களுக்குமிடையிலான உறவில் குடிமக்களை வெறும் நுகர்வோராக மட்டுமே அரசு கருதுகிறது. கடுமையாக உழைத்து வாழ்வை விதம் விதமாக அனுபவிக்க வேண்டுமென்ற உணர்வைத்தான் அது கற்பிக்கிறது. அரசியல் என்பது சாக்கடை, குறுக்கு வழியில் கொள்ளையடிக்கவே அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்றும், அரசியல் சாராத படித்த வர்க்கத்தினரும் நிபுணர்களும் நிர்வாகத்தை நடத்தினால்தான் நாடு முன்னேறும் என்று போதிக்கப்பட்டு அரசியலிலிருந்தே, அரசியல் நடவடிக்கைகளிலிருந்தே படிப்படியாக மக்கள் விலக்கி வைக்கப்பட்டு வருகிறார்கள். வளர்ச்சித் திட்டங்கள், சமூக நலத்திட்டங்களிலும் குளங்கள், ஏரிகள், ஆறுகள், காடுகள் போன்ற இயற்கை வளங்களை பராமரித்துப் பயன்படுத்துவதற்கான சுயேச்சையான அதிகாரம் கொண்ட குழுக்களிலும் ஊராட்சி, நகராட்சி தலைவர்கள், தன்னார்வ குழுக்கள், மகளிர் சுய நிதி உதவிக் குழுக்கள் ஆகியோருடன் மக்களில் சில முக்கியமானவர்களையும் பங்கேற்க வைப்பது; இதன் போக்கில் மாவட்ட ஆட்சியர், போலீசு அதிகாரிகள் ஆகியோருடன் கலந்தாலோசிக்க வைப்பது போன்ற நடவடிக்கைகள் வாயிலாக, தங்கள் மூலம்தான் அரசாங்கம் நடத்தப்படுகின்றது என்ற எண்ணத்தை வேர்மட்ட அளவில் ஏற்படுத்தி, மக்களை அரசியல் பக்கம் போகாமல் தடுக்கும் உலகவங்கி திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

வேறுபட்ட கொள்கைகளுக்காக வெவ்வேறு அரசியல் கட்சிகளில் மக்கள் அணிதிரள்வதும், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அதனடிப்படையில் ஓட்டுப் போடுவதுமான சாத்தியத்தை அரசியல் அரங்கிலிருந்து நவீன தாராளவாதம் எனப்படும் மறுகாலனியாதிக்கப் போக்கு நீக்கி வருகின்றது. ''சிறந்த அரசாளுமை'' என்பதே எல்லா அரசுகளின் நோக்கமாக இருக்க வேண்டுமென்று இப்போக்கு வரையறுத்துள்ளது. புதிய தாராளவாத வகையிலான கட்டுமான சீர்திருத்தங்களை கறாராகவும் ஈவிரக்கமின்றியும் செயல்படுத்துவதையே சிறந்த அரசாளுமை என்று உலக முதலாளித்துவம் போற்றுகிறது. இதற்கேற்ப ஓட்டுக் கட்சிகளுக்கிடையே கொள்கை வேறுபாடுகள் இல்லாமல் போய்விட்டன. எல்லா ஓட்டுக் கட்சிகளும் கார்ப்பரேட் கொள்ளைக்கான சேவையில் ஓரணியில் நிற்பதாக மாறிவிட்ட பிறகு, கொள்கை வேறுபாடுகள் காலிப் பெருங்காய டப்பாவாக மாறிவிட்டன. பண பலம், சாதிய பலம், குண்டர் பலத்தைக் கொண்டு தேர்தலைச் சந்திப்பதாக ஓட்டுக் கட்சிகளும் இன்று மாறிவிட்டன.

ஒரு பொதுக் கூட்டம் என்றால் மேடை அமைப்பது, தோரணம் கட்டுவது, சுவரொட்டி விளம்பரம் செய்வது, மக்களைத் திரட்டி வருவது - என இதுநாள்வரை தொண்டர்கள் செய்து வந்த பணிகளை இப்போது காண்டிராக்டர்களிடம் ஓட்டுக் கட்சிகள் ஒப்படைத்துவிட்டன. ஓட்டுக் கட்சிகளின் தன்மையும் இப்போது மாறிவிட்டதால், அவற்றுக்கு மக்களை அரசியல் ரீதியில், கொள்கை அடிப்படையில் அணிதிரட்டவோ, அரசியல் போராட்டங்களை நடத்தவோ அவசியமில்லாமல் போய்விட்டன. அரசு அதிகாரத்திலிருந்து சொல்லிக் கொள்ளப்படுகிற ஜனநாயகத்தை வெளியேற்றி விட்டு, முதலாளித்துவ வர்க்கக் கோடீசுவரர்கள் அதனைக் கைப்பற்றியிருப்பது போலவே, எல்லா முதலாளித்துவ அரசியல் கட்சிகளிலும் உட்கட்சி ஜனநாயகம் ஒழிந்து ஒரு கும்பல் அல்லது குடும்பத்தின் அதிகாரமாக சீரழிந்திருக்கிறது.

முன்பு சேஷன் தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்தபோது, இவ்வாறு தேர்தல் நடத்தை விதிகள் கறாராகத் திணிக்கப்பட்டன. இது, தேர்தலை நேர்மையாகவும் சுதந்திரமாகவும் நடத்தவேண்டும் என்ற நல்லெண்ணத்திலிருந்து உருவானதல்ல. மாறாக, மறுகாலனியாதிக்கக் கொள்கைகளுக்கு ஏற்ப அரசு நிர்வாக அமைப்பிலும், தேர்தல் முறையிலும் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக அதற்கேற்ப தேர்தல் நடத்தை



படிப்பகம்

www.padippakam.com

விதிகளும் மாற்றப்பட்டன. ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்களால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது,சுவரெழுத்துகள் - சுவரொட்டிகளால் நகரின் அழகு கெடுகிறது என்று கூறி இவற்றுக்குத் தடைவிதித்து புதுப்புது ஜனநாயக விரோதச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

இப்படி மறுகாலனியத்துக்குப் பொருத்தமான முறையில், அரசு அமைப்பிலும் அரசியல் கட்சிகளிலும் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களுக்கு ஏற்ப அரசியலிலிருந்தும், அரசியல் நடவடிக்கைகளிலிருந்தும் மக்களை விலக்கி வைப்பது என்ற நோக்கத்தை நிறைவேற்றவே தேர்தல் ஆணையம் இம்சை அரசனாக ஆரவாரம் செய்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, இன்றைய அரசியலமைப்பு முறை மீது நம்பிக்கை ஏற்படுத்த ஓட்டுக் கட்சிகளின் அராஜகங்களுக்கு எதிராகக் கெடுபிடிகளைக் காட்டுகிறது. இன்றைய அரசியலமைப்பு முறை மீதும், ஓட்டுச்சீட்டு - தேர்தல் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையிழந்து புரட்சிகர இயக்கங்களின் பக்கம் மக்கள் திரும்புவதைத் தடுக்கும் நோக்கில், இன்றைய அரசியலமைப்பு முறையில் சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டால், விதிகளைக் கறாராகச் செயல்படுத்தினால் தேர்தல் அராஜகங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுத்தவே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஊடகங்களின் சந்தை நடுத்தர வர்க்கத்தினரிடம் மையமாக இருப்பதால், நடுத்தர வர்க்கத்தின் கருத்தைப் பிரதிபலித்து இத்தகைய நடவடிக்கைகளை அவை ஆரவாரத்துடன் வரவேற்கின்றன.

இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு, தேர்தல் ஆணையம் ஏதோ சுதந்திரமான - நடுநிலையான தேர்தலை நடத்தும் நோக்கத்தில் நடத்தை விதிகளைக் கறாராகச் செயல்படுத்துவதாகக் கூறி ஆளும் வர்க்கங்களும் அவற்றின் ஊதுகுழல்களாக ஊடகங்களும் மக்களை ஏய்த்து வருகின்றன.

● தனபால்

# டௌ கெமிக்கல்ஸுக்கு சி.பி.எம்.-இன் ஆராதனை!

**மேற்கு வங்கத்தில் முதலீடு செய்யுமாறு டௌ கெமிக்கல்ஸுக்கு அமெரிக்கத் தூதரகம் மூலம் அழைப்பு விடுத்திருக்கிறார், புத்ததேவ்.**

போபாலில், அமெரிக்க யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நச்சு வாயுத் தாக்குதலால் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் இன்றும் நடைபிணமாக வாழ்கிறார்கள். நீர், நிலம் அனைத்தும் நச்சுவாயுக் கழிவால் நஞ்சாக்கப்பட்டு பலரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று வருகிறது. 2001-இல் யூனியன் கார்பைடை விலைக்கு வாங்கிய டௌ கெமிக்கல்ஸ் எனும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம், போபால் ஆலையில் 26 ஆண்டுகளாகக் குவிந்து கிடக்கும் நச்சு இரசாயனக் கழிவுகளை அகற்றுவதற்கும், நச்சு வாயுவால் நடைபிணமாகிவிட்ட மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போபால் மருத்துவமனையை நடத்துவதற்கான செலவுகளுக்குப் பொறுப்பேற்பதற்கும் மறுத்து வருகிறது. நட்ட ஈடு கேட்டும், நச்சுக் கழிவுகளை அகற்றக் கோரியும் பல வழிகளில் போராடி வரும் போபால் மக்களை போலீசின் லத்தி கம்புகளும், சிறைக் கொட்டடிகளுமே எதிர்கொள்கின்றன.

இந்நிலையில், சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரும், மேற்கு வங்க முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா டௌ கெமிக்கல்ஸ் நிறுவனம் மே.வங்கத்தில் முதலீடு செய்ய சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கிறார். ''டௌ கெமிக்கல்சுக்கு போபால் விவகாரத்தில் சட்ட ரீதியாகப் பொறுப்பேற்க வேண்டிய தார்மீகக் கடமை உள்ளது. அதேசமயம், மே.வங்கத்தைத் தொழில்மயமாக்க டௌ நிறுவனத்தின் முதலீடுகளை வரவேற்கிறேன்'' என்று அமெரிக்கக் கருவூலச் செயலர் ஹென்றி பால்சனிடம் கடந்த 2007-ஆம் ஆண்டில் அவர் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். உலகமயமாக்கலையும் தாராளமயத்தையும் நாங்கள் வரவேற்கிறோம் என்றும், இன்றைய நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் மாறிக் கொண்டிருக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளதை ஹென்றி பால்சன் அமெரிக்க அரசுக்கு செய்திக் குறிப்பாக அனுப்பியுள்ளார். இந்து நாளேட்டில் அண்மையில் வெளியிடப்பட்ட, விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்திய அமெரிக்கத் தூதரக செய்திக் குறிப்புகளில் இந்த உண்மை வெளிவந்துள்ளது. இது மட்டுமல்ல; நச்சு இரசாயனப் பொருட்களையும், ஆயுதங்களையும் உற்பத்தி செய்துவரும் டௌ கெமிக்கல்ஸ் இந்தியாவின் அரசியல்-அதிகாரத் தாழ்வாரங்களில் செல்லப் பிள்ளைபோல வலம் வருவதும் அம்பலமாகியுள்ளது.

டௌ கெமிக்கல்ஸ் தொடங்க முயற்சிக்கும் இரசாயன ஆலைத் திட்டங்களுக்கு உள்ளூர் மக்களின் எதிர்ப்பு தொடர்வதால் இத்தகைய சிக்கல்களிலிருந்தும், போபால் படுகொலைக்கு நட்ட ஈடு வழங்கக் கோரும் வழக்கிலிருந்தும் விடுவிக்கக் கோரி இந்திய அரசைப் பல வழிகளில் அமெரிக்க தூதரகம் மூலமாக டௌ நிர்பந்தித்து வந்துள்ளதும், டௌ-வுக்கு ஆதரவாக எல்லா ஓட்டுக் கட்சிகளும் அதிகார வர்க்கமும் விசுவாசமாக வேலை செய்துள்ளதும் விக்கிலீக்ஸ் செய்திக் குறிப்புகளில் அம்பலமாகியுள்ளன.

தூதரகச் செய்திக் குறிப்பின்படி, போபால் படுகொலைகளுக்கு நட்ட ஈடு கோரும் வழக்கால் இந்தியாவில் அமெரிக்கா செய்ய இருக்



படிப்பகம்

www.padippakam.com

கும் முதலீடுகள் பாதிக்கும் என்று அமெரிக்கத் தூதர் எச்சரித்ததும், திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அலுவாலியா, ''போபால் விசவாயுப் படுகொலை போல வேறெதற்காவது எதிர் காலங்களில் டௌ பொறுப்பேற்க வேண்டியிருக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை; நட்ட ஈடு வழக்கை இந்திய அரசு நடத்துவதன் நோக்கம் போபால் நச்சுக் கழிவுகளை டௌ சுத்தப்படுத்த வேண்டும் என்ற பொருளில் அல்ல'' என்று சமாதானப்படுத்தியுள்ளார். மேலும், அக்டோபர் 2006-இல் நடந்த கார்ப்பரேட் முதலாளிகளுடனான ஒரு சந்திப்பில் அன்றைய வர்த்தகத்துறை அமைச்சர் கமல் நாத்தும், திட்டக் கமிஷன் துணைத் தலைவர் அலுவாலியாவும், போபால் நச்சுக் கழிவுகளை அகற்றும் பொறுப்பு டௌ கெமிக்கல்சுக்கு இல்லை என்று உறுதியளித்துள்ளதும் தூதரக செய்திக் குறிப்பில் அம்பலமாகியுள்ளது.

இவை மட்டுமின்றி, டௌ கெமிக்கல்ஸின் புதிய முதலீடுகளுக்காக ஓட்டுக்கட்சிகள் செய்துள்ள பித்தலாட்டங்களும் விக்கிலீக்ஸ் மூலம் அம்பலமாகியுள்ளன. மகாராஷ்டிராவின் புனேவில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய இரசாயன ஆலைக்கான திட்டத்தை டௌ செயல்படுத்த முற்பட்டது. இப்பகுதியைச் சேர்ந்த வர்க்காரி இன மக்கள், நிலத்தடி நீரையும் ஆற்று நீரையும் பாழாக்கும் இத்திட்டத்தை 2008-இல் எதிர்த்துப் போராடினர். இப்போராட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்ட இப்பகுதியின் சிவசேனா நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிராவ் பாட்டீல், ஒரு பக்கம் டௌ-வை எதிர்த்துப் போராடுவது போல மக்களிடம் வேடம் போட்டுக் கொண்டு, திரைமறைவில் டௌ கெமிக்கல்ஸிடம் பேரம் பேசியுள்ளதுடன், டௌ-வின் திட்டத்தை நிறைவேற்றிட பல ஆலோசனைகளும் வழங்கியிருப்பது விக்கிலீக்ஸ் மூலம் அம்பலமாகியுள்ளது.

2009-இல் வர்க்காரி இன மக்கள், மகாராஷ்டிராவைச் சேர்ந்த மத்திய விவசாய அமைச்சர் சரத்பவாரைச் சந்தித்து டௌ கெமிக்கல்ஸ் பற்றி முறையிட்ட பிறகு, ஓட்டு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ள பவாரின் ஆலோசனைப்படி புனே திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தார், மகாராஷ்டிர முதலமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக். அத்திட்டத்தை ஆய்வு செய்து விசாரிக்க கண்துடைப்பு கமிஷன் ஒன்றையும் நிறுவினார். திட்டம் தள்ளிப் போவது கண்டு பொறுமையிழந்த டௌ கெமிக்கல்ஸின் சர்வதேசத் தலைவர் ஆண்டிரிவ் லிவெரிஸிடம் இரண்டே மாதத்தில் விசாரணைக் கமிஷனை முடித்துவிட்டு, திட்டத்தை மீண்டும் தொடங்கிவிடலாம் என்று அவர் உறுதியளித்துள்ளார். இதற்கு முன்பு அமைக்கப்பட்ட முதல் விசாரணைக் கமிஷனைப் போலவே இந்தக் கமிஷனும் டௌவின் புனே திட்டம் சரியானதுதான் என்று முடிவை அறிவித்தது. இருப்பினும், வர்க்காரி மக்களின் தொடர்ச்சியான போராட்டம் காரணமாக, 2010-இல் வேறுவழியின்றி புனேவிலிருந்து பின்வாங்கியது டௌ கெமிக்கல்ஸ்.

இதேபோல, குஜராத்தில் சக்கான் எனுமிடத்தில் டௌ கெமிக்கல்ஸ் ஒரு திட்டத்தை ஆரம்பிக்க இருந்தது. இதனை அனுமதிப்பதற்கு 2008-இல் மத்திய இரசாயன அமைச்சராக இருந்த ராம் விலாஸ் பாஸ்வான் பெருமளவு லஞ்சப் பணம் கேட்டதால் நிறுத்தி வைக்கப்பட்டதை தூதரகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

மகாராஷ்டிராவின் புனே பகுதியில் டௌ கெமிக்கல்ஸ் அமைக்கவிருந்த ஆலையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்க அரசு முனைந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து வர்க்காரி பழங்குடி இன மக்கள் நடத்திய முற்றுகைப் போராட்டம். (கோப்புப் படம்)



டௌ கெமிக்கல்ஸ் விசயத்தில் மட்டுமா? 2005-ஆம் வருடம் கையெழுத்திடப்பட்ட இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்திற்கு முன்பே இந்தியாவை அமெரிக்க ஆயுத வியாபாரிகளிடம் அடகு வைக்கும் வேலையை வாஜ்பேயி அரசு ஆரம்பித்து விட்டதையும், பின்னர் இதனை 2005-இல் மன்மோகன்சிங் அரசு முழுமையாக நிறைவு செய்ததையும் விக்கிலீக்ஸ் செய்திக் குறிப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. இச்செய்திக் குறிப்புகளின் படி, வாஜ்பேயி ஆட்சியின் போது இந்தியாவிற்கு விற்கப்படும் ஆயுதங்களின் பயன்பாட்டை சோதனையிடும் உரிமை அமெரிக்காவிற்கு கொடுக்கப்பட்டது



படிப்பகம்

www.padippakam.com

டன், பிற்பாடு வர இருந்த இந்திய-அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்துக்குத் தேவையான தயாரிப்பு வேலைகளும் தொடங்கின.

மக்களைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலையற்ற ஓட்டுக்கட்சித் தலைவர்களும், அதிகாரிகளும் அமெரிக்கத் தூதரகத்தின் வாயிலில் சேவகம் செய்ய நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டு காத்திருக்கும் தொகுப்புச் சித்திரத்தைத்தான் வெளிவந்துள்ள விக்கிலீக்ஸ் செய்திக் குறிப்புகள் காட்டுகின்றன. இவையெல்லாம் புதிய விசயங்கள் அல்ல. மார்க்சிய-லெனினியப் புரட்சியாளர்கள் அவ்வப்போது அம்பலப்படுத்தி வந்தவற்றைத்தான் இன்று அமெரிக்க, இந்திய ஆளும் கும்பலின் சுய வாக்குமூலங்களாக விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது. ஆயினும், இவையெல்லாம் இப்போதுதான் தம் பார்வைக்கு வந்தது போல இந்து நாளேடு பரபரப்பாக செய்தி வெளியிடுகிறது. பிற இந்திய ஊடகங்களோ வாய்மூடி மௌனம் சாதித்து இந்த உண்மைகளை மூடிமறைக்கின்றன.

அனைத்து ஓட்டுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கையூட்டுக் கொடுத்துதான் 123 அணு ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது என்ற செய்தி வெளியானவுடன் பா.ஜ.க.வும், சி.பி.எம். கட்சியும் உத்தமர்கள் போல குதித்தனர். இந்துத்துவம் எமது அரசியல் பிழைப்பிற்கான சந்தர்ப்பவாத முழக்கமென்று பா.ஜ.க. கூறியிருப்பதும், அணு ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவை எதிர்ப்பது வெறும் வெளிப்பார்வைக்குத்தான் என்று அத்வானி கூறிய சுய வாக்குமூலமும், மன்மோகன் சிங் அரசை விட வாஜ்பேயி அரசுதான் சிறப்பாகச் சேவை செய்கிறது என்று அமெரிக்கத் தூதரகம் பா.ஜ.க.விற்கு நற்சான்றிதழ் வழங்கியதும் விக்கிலீக்ஸ் மூலம் வெளிவந்தன. இவற்றைப் பொய்ச் செய்திகள் என்று பா.ஜ.க. மறுப்பு தெரிவித்தது. கடைசியாய், இப்போது சி.பி.எம். கட்சியின் யோக்கியதையும் வெளியானவுடன், அவர்களும் தூதரக செய்திக் குறிப்புகள் திரிக்கப்பட்டவை என்று சாடுகிறார்கள். ஈயத்தைப் பார்த்து இளித்த பித்தளையின் கதையாக அனைவரும் அம்பலமாகிப் போயுள்ளதால், விக்கிலீக்ஸின் செய்திக் குறிப்புகள் கிளப்பிய பரபரப்பு அலை இப்போது ஓய்ந்துவிட்டது.

வாய்மூடி மவுனமாக இருப்பதன் மூலம் மக்களின் பார்வையிலிருந்து இந்தத் துரோகங்களை மறைத்துவிட எண்ணுகிறார்கள் ஓட்டுக் கட்சிகளும், அதிகாரிகளும், ஊடக முதலாளிகளும். இவர்களின் கூட்டுக் களவாணித்தனத்தை முறியடிக்க, இந்தச் செய்திகள் பரவலாக மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட வேண்டும். அமெரிக்காவின் தொங்கு சதையாக அழுகி நாறும் இன்றைய அரசியலமைப்பு முறையின் தராதரம் என்னவென்பதை அனைவரையும் உணரச் செய்ய வேண்டும்.

• அழகு

## சந்தி சிரிக்கும் அமெரிக்க ஜனநாயகம்

விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க இராணுவச் செய்திக் குறிப்புகள், அமெரிக்க இராணுவம் செய்து வரும் அட்டூழியங்களையும், மனித உரிமை மீறல்களையும் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது. இவற்றை விக்கிலீக்ஸுக்குச் சேகரித்துக் கொடுத்த பிராட்லே மேனிங் என்ற அமெரிக்கர், அமெரிக்க அரசால் சிறை வைக்கப்பட்டுள்ளார். இவர் மீது ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ள பல்வேறு குற்றச்சாட்டுகளுடன், கடந்த மார்ச் மாதம் புதிதாக 22 குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது, அமெரிக்க இராணுவம். அவற்றில் ஒன்று, எதிரிக்கு உதவி செய்வது என்ற பிரிவின் கீழ் வரும் குற்றச்சாட்டு. இதன்படி, அமெரிக்க இராணுவ இரகசியங்களை - தகவல்களை அமெரிக்காவின் எதிரிக்குக் கொடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார் மேனிங். எதிரி யாரென்று குற்றச்சாட்டில் குறிப்பிடப்படவில்லை.




பிராட்லே மேனிங்கை விடுதலை செய்யக் கோரி அமெரிக்காவில் நடந்து வரும் பிரச்சார இயக்கம். (உள்படம்) பிராட்லே மேனிங்.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் மேனிங்கிற்கு மரண தண்டனை கொடுக்கப்படும் என்பதால், இத்தகைய குற்றச்சாட்டின் ஆபத்து குறித்து அமெரிக்க ஊடகங்கள் விவாதிக்கத் தொடங்கியுள்ளன. மேனிங் தண்டனைக் குரியவர் எனில், விக்கிலீக்ஸ் எதிரி எனில், இவற்றை பிரசுரித்த அமெரிக்க ஊடகங்களும்கூட எதிரிகளாகி விடுவர். அரசின் அயோக்கியத்தனங்களை விக்கிலீக்ஸ் வெளிப்படுத்தினால் மரணதண்டனை என்று சொல்வதன் மூலம், மக்கள் நலன் கருதி ஊடகங்களில் இவற்றை வெளியிடுவதும் மரண தண்டனைக் குரியவைதான் என்று அமெரிக்க இராணுவம் இதன் மூலம் மிரட்டுகிறது. இது தான் பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் யோக்கியதை!



படிப்பகம்

# ஊழல் தடுப்பு ஆணைய மக்கள் வரைவுச் சட்டம்:

# புண்ணுக்குப் புனுகு!

**தனியார்மயம்–தாராளமயம் என்ற கார்ப்பரேட் பகற்கொள்ளையை ஒழிக்காமல், ஊழலை ஒழிக்க முடியாது.**

பத்திரிகைகளும், தனியார் தொலைக்காட்சி ஊடகங்களும் கடந்த ஏப்ரல் மாதத்தில் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஆகியவற்றுக்கு இணையாக முக்கியத்துவம் அளித்து விளம்பரப்படுத்திய நிகழ்ச்சி அண்ணா ஹஸாரே தனது ஆதரவாளர்களுடன் டெல்லியில் நடத்திய உண்ணா விரதப் போராட்டமாகத்தான் இருக்கும். ''ஊழல் தடுப்பு ஆணைய மக்கள் வரைவுச் சட்டத்தை உருவாக்குவதற்கான கமிட்டியை அமைத்து, அதில் குடிமைச் சமூக அமைப்புகளைச் சேர்ந்த ஊழியர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்; அக்கமிட்டி அரசு உருவாக்கியிருக்கும் ஊழல் தடுப்பு ஆணைய வரைவுச் சட்டத்தை மட்டுமின்றி, இது தொடர்பாக ஊழலுக்கு எதிரான இந்தியா என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் உருவாக்கியிருக்கும் வரைவுச் சட்டத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'' எனக் குடிமைச் சமூக அமைப்புகள் முன்வைத்த கோரிக்கைகளை மைய அரசு ஏற்றுக்கொண்டதையடுத்து, அண்ணா ஹஸாரே தனது உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

ஊழல் தடுப்பு ஆணைய மசோதாவை உருவாக்கக் கூட்டுக் கமிட்டி அமைப்பதை மைய அரசு ஏற்றுக் கொண்டு, அதனை அரசிதழில் வெளியிட்டதைக் காட்டும் அண்ணா ஹஸாரே மற்றும் முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி கிரண் பேடி.



இதன் அடிப்படையில், அரசு சார்பில் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம், கபில் சிபல், வீரப்ப மொய்லி, சல்மான் குர்ஷித் ஆகிய ஐந்து அமைச்சர்களையும், குடிமை அமைப்புகளின் சார்பில் அண்ணா ஹஸாரே, அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் உச்ச நீதிமன்ற வழக்குரைஞர்கள் பிரசாந்த் பூஷண், சாந்தி பூஷண், கர்நாடக மாநில லோக் ஆயுக்தாவின் தலைவர் சந்தோஷ் ஹெக்டே ஆகியோரையும் கொண்ட கூட்டு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் இக்கமிட்டி ஊழல் தடுப்பு ஆணையச் சட்டம் குறித்து விவாதித்து, ஒரு நகல் மசோதாவைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஊழல் என்பது இன்றோ, நேற்றோ தொடங்கி நடந்துவரும் பிரச்சினையல்ல. எனினும், உலக வங்கி உத்தரவுப்படி பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்த பின் நடைபெற்றுள்ள ஊழல்களோ மலைப்பூட்டுபவையாக உள்ளன. ''தனியார்மய நடவடிக்கைகள் அரசுக்கு நட்டமேற்படுத்துவதாக இருந்தாலும், அந்நடவடிக்கைகள் முறையான ஏலம் போன்ற விதிமுறைகளின்படி நடந்திருந்தால், அவற்றை ஊழலாகப் பார்க்க முடியாது; தொழில் வளர்ச்சிக்கான நடவடிக்கையாகத்தான் பார்க்க முடியும்'' என்பதுதான் அரசு, நீதிமன்றம், பொருளாதார நிபுணர்கள் ஆகியோரின் கருத்து. இந்த அடிப்படையில்தான் மாண்டேக் சிங் அலுவாலியா, கபில் சிபல் உள்ளிட்ட பலர் 2-ஜி அலைக்கற்றை விற்பனையை ஊழலாகப் பார்க்க முடியாது எனக் கூறிவருகின்றனர்.

இந்த ஊழல்களில் எலும்பைத் தின்றவர்கள் அரசியல்வாதிகள், அதிகாரிகள் என்றால், டாடா, அம்பானி போன்ற இந்திய நாட்டைச் சேர்ந்த தரகு முதலாளித்துவக் கும்பலும், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும்தான் கறியைப் பங்கு போட்டுக் கொண்டவர்கள். எனவே, ஒரு டிராபிக் போலீசுக்காரன் ஐம்பது, -று எனக் கையூட்டுப் பெறுவதையும், தனியார்மயம் என்ற பெயரில் கார்ப்பரேட்

www.padippakam.com



கூட்டுக் கமிட்டியில் இடம் பெற்றுள்ள மைய அமைச்சர்கள் (மேல்படம்-இடமிருந்து) பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம், கபில் சிபல், வீரப்ப மொய்லி, சல்மான் குர்ஷீத் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகளின் சார்பாக இடம் பெற்றுள்ள (கீழ்படம்-இடமிருந்து) அன்னா ஹஸாரே, சாந்தி பூஷன், சந்தோஷ் ஹெக்டே, பிரசாந்த் பூஷன் மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால்.

முதலாளிகள் - அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கம் ஆகியோர் கூட்டணி அமைத்துக்கொண்டு அடிக்கும் கொள்ளையையும் சமப்படுத்திப் பார்க்க முடியாது.

எனவே, ஊழலை எதிர்த்துப் போராடுவதாகக் கூறுபவர்கள் தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் சட்டபூர்வமாக நடந்துவரும் இந்த கார்ப்பரேட் பகற்கொள்ளையை எதிர்த்துப் போராடுவதையும் தமது நிகழ்ச்சி நிரலில் வைக்க வேண்டும். இதனை விடுத்து, வட்டாட்சியர்-பத்திரப் பதிவு அலுவலகங்கள் போன்ற இடங்களில் நடைபெறும் சாதாரண ஊழல், கையூட்டையும்; அரசியல்வாதிகள் வாங்கும் இலஞ்சத்தையும் மட்டும் எதிர்த்து சண்டமாருதம் செய்பவர்கள் ஒன்று விவரம் தெரியாதவர்களாக இருக்க வேண்டும்; இல்லை, உண்மையை மூடிமறைப்பவர்களாக இருக்க வேண்டும்.

ஊழலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கும் அண்ணா ஹஸாரேவோ, தனது உண்ணாவிரதத்தை முடித்த கையோடு தனியார்மயம் - தாராளமயத்தை அமல்படுத்துவதில் முன்னணியில் இருக்கும் குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை, அதற்காகவே பாராட்டுகிறார். 2,000 முசுலீம்களைப் படுகொலை செய்த இந்து மதவெறிக் கும்பலின் தளபதி மோடியை எப்படிப் பாராட்டலாம் எனக் கேட்டவர்களுக்கு, குஜராத்தின் கிராமப்புறங்களில் வளர்ச்சியைக் கொண்டுவந்திருப்பதற்காக மோடியைப் பாராட்டுவதாகவும், அதேசமயத்தில் தான் மதவாதத்தை எதிர்ப்பதாகவும் கூறுகிறார், ஹஸாரே. இந்து மதவெறி பாசிசமும், தனியார்மயம் - தாராளமயமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பது ஹஸாரேவுக்கும், அவரை ஆதரிக்கும் மெத்த படித்த கும்பலுக்கும் தெரியாதா?

குஜராத் மாநிலத்தில் விவசாயிகளின் நிலங்களை கார்ப்பரேட் நிறுவனங்களே நேரடியாக இறங்கி அடிமாட்டு விலைக்கு அபகரித்துக் கொள்ளும் வகையில் தனது ஆட்சியை நடத்தி வருகிறார், மோடி. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதை நிறுத்திவிட்ட மோடி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஏராளமான சலுகைகளைக் கொட்டிக் கொடுக்கத் தயங்குவதில்லை. இதற்காகத்தான் மோடியின் படுகொலைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, கார்ப்பரேட் முதலாளிகள் அவரைப் பாராட்டுகிறார்கள். அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களுள் ஹஸாரேவும் ஒருவர் எனும் பொழுது, ‘வளர்ச்சி’ குறித்த பார்வையில் ஹஸாரேவுக்கும் ஆளும்கும்பலுக்கும் இடையே எவ்விதமான கொள்கை வேறுபாடும் கிடையாது என்பது தெளிவாகிவிடுகிறது. ஹஸாரே மோடியைப் பாராட்டியது மட்டுமல்ல; கார்ப்பரேட் பகற்கொள்ளையைச் செயல்படுத்தி வருவதோடு, அக்கொள்ளையில் பங்குதாரர்களாகவும் இருக்கும் ப.சிதம்பரம், கபில் சிபல் ஆகியோருடன் சேர்ந்து கூட்டுக் கமிட்டியில் அமர்வதற்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காததும் அவர்களின் கொள்கை உடன்பாட்டைப் பளிச்சென எடுத்துக் காட்டுகின்றன.

அந்த ‘வளர்ச்சிக்கு’ ஊழல் தடையாக இருந்துவிடக் கூடாது; ஊழலை விசாரிப்பதிலும் தண்டிப்பதிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசிற்கும் மேலான அதிகார அமைப்புகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதுதான் ஹஸாரே மற்றும் அவரது ஆதரவாளர்களின் கோரிக்கை. ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதிலும், தண்டிப்பதிலும் பழைய நடைமுறையே தொடர வேண்டும் என்பதுதான் காங்கிரசு உள்ளிட்ட ஓட்டுக்கட்சிகளின் கொள்கை. இதுதான் இவர்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு.

• • •

பொதுத்துறை நிறுவனங்களை விற்பதில் நடந்துவரும் ஊழல்கள், 2-ஜி ஊழல், ஆதர்ஷ் வீட்டு மனை ஊழல், இஸ்ரோவில் நடந்த எஸ் - பேண்ட் ஊழல், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஊழல் என



படிப்பகம்

www.padippakam.com




> கார்ப்பரேட் பகற்கொள்ளையை எதிர்க்கும் பினாயக் சென் உள்ளிட்ட மனித உரிமை ஆர்வலர்கள் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப் படுகிறார்கள். அதேபொழுதில், கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு ஊறு நேராத வண்ணம் ஊழலுக்கான தீர்வை முன்வைக்கும் ஹஸாரேயின் கோரிக்கைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அடுத்தடுத்து அம்பலமாகி வரும் இக்கார்ப்பரேட் பகற்கொள்ளை, பொது மக்களின் மத்தியில் இந்த அரசியல் அமைப்பின் மீதான நம்பிக்கையைக் குலைத்து வருகிறது. அதேசமயம், ஆளும் கும்பலும் ஓட்டுக்கட்சிகளும், பொதுமக்கள் புரட்சி போன்ற வேறு மாற்று தேடிப் போவதைத் தடுப்பதற்கும், அவர்களிடம் இந்த அமைப்பின் நம்பகத்தன்மையைத் தக்க வைப்பதற்கும் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்து வருவதாகக் காட்டிக் கொள்கின்றன.

நீதிமன்ற முனைப்பைக் காட்டி (Judicial activism) இனி ஊழலற்ற நேர்மையான ஆட்சிக்கு வழிபிறந்து விட்டதாகக் கூறினார்கள். ஆனால், கீழமை நீதிமன்றங்கள் தொடங்கி உச்ச நீதிமன்றம் வரை ஊழலில் புரையோடிப் போயிருப்பது அம்பலமாகி, அந்த நம்பிக்கை தகர்ந்து விட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டு, அச்சட்டம் அதிகார வர்க்க முறைகேடுகளைத் தடுத்து நிறுத்திவிடும் எனப் பிரச்சாரம் செய்யப்பட்டது. அச்சட்டமே பிரதம மந்திரி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் இராணுவம், போலீசு அதிகாரிகளைப் பாதுகாக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டிருப்பதோடு, அச்சட்டத்தின் கீழ் அதிகார வர்க்க முறைகேடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முயன்ற தன்னார்வத் தொண்டு நிறுவன ஊழியர்களுள் பலர் மாஃபியா கும்பல்களால் கொலை செய்யப்பட்டனர். இப்பொழுது ஹஸாரேவும் அவர்களது ஆதரவாளர்களும் கோருவது போல, ஊழல் ஆணையத் தடுப்புச் சட்டத்தையும் ஊழல் தடுப்பு ஆணையத்தையும் உருவாக்கிவிட்டால், இந்தியா வல்லரசாவதற்கு இருந்து வரும் கடைசித் தடையும் - ஊழலும் - ஒழிந்துவிடும் என்பது போல பிரச்சாரம் செய்யப்படுகிறது.

‘‘உச்ச நீதிமன்றம், தேர்தல் கமிசன் போல ஒரு சுயேச்சையான அமைப்பாக, அப்பழுக்கற்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணையத்தை அமைக்க வேண்டும்; பிரதம மந்திரி, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக்கூட விசாரிக்கும் அளவிற்கு இவ்வாணையத்திற்கு அதிகாரம் தரப்பட வேண்டும்’’ என இவர்கள் கோருகிறார்கள். எனினும், இப்படி அமைக்கப்படும் ஆணையம் ஊழல் புகார்களை விசாரிப்பதற்கும், வழக்கு நடத்தித் தண்டிப்பதற்கும் சி.பி.ஐ., போலீசு, நீதிமன்றம் ஆகிய அதிகார வர்க்க அமைப்புகளைத்தான் சார்ந்து இயங்க வேண்டியிருக்கும். ஏற்கெனவே ஊழல் - அதிகார வர்க்க முறைகேடுகளால் புரையோடிப் போயிருக்கும் இவ்வமைப்புகள், ஊழல் தடுப்பு ஆணையத்தின் கீழ் வந்தவுடன் நேர்மையாக நடந்து கொள்ளும் என நம்புவது குருட்டுத்தனமாகத்தான் இருக்க முடியும். ஒரு சில நேர்மையான அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முனைந்தால்கூட, கார்ப்பரேட் பகற்கொள்ளையில் ஈடுபட்டுள்ள மாஃபியா கும்பல்கள் அவர்களைக் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள். மகாராஷ்டிரா மாநிலத்தில் மண்ணெண்ணெய் கலப்படத்தைத் தடுக்க முயன்ற உயர் அதிகாரி உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஊழலை மட்டுமல்ல, தனியார்மயம் - தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதன் விளைவாக உருவாகும் பல்வேறு சமூக அநீதிகளை, இந்த அமைப்பிற்குள்ளேயே தீர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கையை ஆளும் கும்பல் தொடர்ந்து உருவாக்கி வருகிறது. ஒருபுறம், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் கொள்ளைக்காகப் பழங்குடி இன மக்களைக் காடுகளில் இருந்து துரத்தியடித்து வரும் இந்திய அரசு, இன்னொருபுறம் பழங்குடி இன மக்களுக்காக வன உரிமைச் சட்டத்தை இயற்றுகிறது. உணவுப் பொருட்களை வாங்க வழியின்றி ஏழை மக்கள் பட்டினிக்குள் தள்ளப்படும் சூழ்நிலையில், உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் பன்னாட்டு ஏகபோக மற்றும் உள்நாட்டுத் தரகு முதலாளிகள் உள்ளூரில் கோவில் கட்டிக் கொடுப்பது, உள்ளூர்வாசிகளுக்கு அமைப்பு சாரா தொழில்களில் பயிற்சி கொடுப்பது ஆகிய நடவடிக்கைகளில் இறங்குவதைக் காட்டி, கார்ப்பரேட் நிறுவனங்கள் சமூக அக்கறையுடன் செயல்படுவதாக விளம்பரப்படுத்துகிறார்கள்.

இவை போன்ற சீர்திருத்தக் கோரிக்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும், அதற்காக அவர்



படிப்பகம்

www.padippakam.com

களை அணி திரட்டுவதற்காகவும் தான் பல்வேறு அரசு சாரா தன்னார் வத் தொண்டு நிறுவனங்களை ஆளும் கும்பலே திட்டமிட்டு உரு வாக்கி இறக்கிவிட்டு வருவதோடு, அவற்றுக்கு நிதியுதவியும் அளித்து வருகின்றன. ஹஸாரேவும், அவரை முன்னிறுத்தும் ''ஊழ லுக்கு எதிரான இந்தியா'' என்ற அமைப்பும் இப்படிபட்ட அரசு சாரா நிறுவனங்களுள் ஒன்றுதான்.



அன்னா ஹஸாரேவுக்கு ஆதரவு தெரிவித்துக் கூடிய கூட்டத்தில், இந்திய 'தேசிய'க் கொடியோடு, இணைந்து அசைந்தாடும் காவிக் கொடிகள்.

இவ்வமைப்பினர் இந்திய 'ஜன நாயகத்தின்' மீது மட்டுமல்ல, அது செயற்படுத்திவரும் தனியார்மயம் - தாராளமயக் கொள்கைகள் மீதும் நம்பிக்கை கொண்டவர்கள். கார்ப் பரேட் நிறுவனங்கள் ஊழலுக்கு எதிரான இவ்வியக்கத்தை நடத்துவ தற்கு, 'சமூக அக்கறையோடு' 82 இலட்சம் ரூபாயை ''ஊழலுக்கு எதிரான இந்தியா'' அமைப்பிற்கு நன்கொடையாக அளித்திருப்பதே இதனை நிரூபிக்கிறது (ஆதாரம்: தின மணி, 18.04.2011). மேலும், ஆன்மிகவாதிகள் என்ற போர்வையில் உலா வரும் கருப்புப் பண, கார்ப்பரேட் சாமியார்களான ராம் தேவ் மற்றும் சிறீ சிறீ ரவிசங்கர் ஆகியோரும் ஊழலுக்கு எதிரான இந்தியா இயக்கத் தில் உறுப்பினர்களாக உள்ளனர். குறிப்பாக, இந்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை ஆதரித்து நிற்கும் நகரப் புற மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கம், சம்பள உயர்வு, வருமான வரி விலக்கு, நுகர்பொருள் கடன், வீட்டு மனை கடன் எனத் தனியார்மயம் வீசியெறிந்து வரும் பல்வேறு சலுகைகளையும் அனுபவித்து வருவ தோடு, தனியார்மயம் - தாராளமயத்தை இன்னும் தீவி ரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மட்டுமே இந் தியா வல்லரசாக முடியும் என நம்புகிறது.

ஊழல்தான் வளர்ச்சியைத் தடுக்கிறது என்று இவ் வியக்கத்தைச் சேர்ந்தவர்கள் தார்மீக கோபத்தோடு உறுமுகிறார்களே, அந்த அரிய கண்டுபிடிப்பு இவர் களின் சொந்த சரக்கல்ல; அது, ஏகாதிபத்தியவாதிகள் ஏழை நாடுகளின் மீது பொருளாதாரச் சீர்திருத்தங் களைத் திணிப்பதற்காகக் கண்டுபிடித்த ஒரு சாக்கு. பொருளாதாரம் அரசின் பிடிக்குள் இருப்பதனால்தான் ஊழல் தலைவிரித்தாடுவதாகவும், பொருளாதாரத்தை அரசின் பிடியில் இருந்து விடுவித்து, சந்தை தீர்மானிக் கும்படி விட்டுவிட்டால் ஊழல் ஒழிந்துவிடும் என் றும், ''சிறந்த அரசாளுமை'' என்பதே எல்லா அரசு களின் நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் ஏகாதி பத்தியவாதிகள் உபதேசித்து வருகிறார்கள். ஆனால், தனியார்மய ஊழலோ கார்ப்பரேட் பகற்கொள்ளை என்ற அளவிற்கு பூதாகரமாக வளர்ந்து விட்டது; சிறந்த அரசாளுமை என்பதோ மக்களின் ஜனநாயக உரிமை கள் அனைத்தையும் மறுக்கும் கார்ப்பரேட் பாசிசமாக மாறி நிற்கிறது.

இக்கார்ப்பரேட் பாசிசத்திற்கு ஏற்றவாறு இந்திய அரசின் கட்டமைப்பும், அதன் நிர்வாகமும், அதன் சட் டங்களும் மாற்றப்பட்டு, நாடு மறுகாலனியாக்கப் பட்டு வருகிறது என்பதுதான் உண்மை. இம்மறு காலனியாதிக்கத்தை எதிர்த்து, இக்கட்டமைப்புக்குள் தீர்வைத் தேட முடியாது என அம்பலப்படுத்தி போராடுவதாலேயே, நக்சல்பாரி புரட்சியாளர்களை ஒழித்துக்கட்ட காட்டு வேட்டை நடத்தப்படுகிறது; இக்கார்ப்பரேட் பகற்கொள்ளையை எதிர்க்கும் பினாயக் சென் உள்ளிட்ட மனித உரிமை ஆர்வலர்கள் தேசத் துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப் பட்டு சிறையில் தள்ளப்படுகிறார்கள். அதே பொழுதில், கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கு ஊறு நேராத வண்ணம், இம்மறுகாலனிய கட்டமைப்புக் குள்ளேயே ஊழலுக்கான தீர்வை முன்வைக்கும் ஹஸாரேயின் கோரிக்கைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஹஸாரேவையும் அவரது ஆதரவாளர்களையும் முதலாளித்துவ ஊடகங்கள் ''ஹீரோ''க்களைப் போலக் கொண்டாடுவதையும், அரசு அவர்களை ராஜ மரியாதையோடு நடத்தி, அவர்களது கோரிக்கைகள் குறித்துப் பேச்சுவாரத்தை நடத்துவதையும் இந்தப் பின்னணியில் இருந்துதான் பார்க்க வேண்டும்.

தெலுங்கானா போராட்டம் நடந்தபொழுது, காந்தி யவாதியான வினோபாவேயின் பூமிதான இயக்கத்தை ஆளும் கும்பல் முன்தள்ளி ஆதரித்ததைப் போல, இப் பொழுது மறுகாலனியாதிக்கத்திற்கு எதிரான போராட் டங்கள் நாட்டின் கிழக்கு மாநிலங்களில் நடந்துவரும் வேளையில், காந்தியவாதியான ஹஸாரேவின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை முன் தள்ளி, உழைக்கும் மக் களை ஏய்க்கப் பார்க்கிறது, இந்திய அரசு.

● ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

## சட்டிஸ்கர்:

# இந்திய அரசின் போர்க்குற்றங்கள்

**காட்டு வேட்டையின்பொழுது நடக்கும் அரசுப் படைகளின் அத்துமீறல்களை, மனித உரிமை மீறல்களாக மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது.**

**கா**ட்டு வேட்டையின் கொடுங்கரங்கள் கடந்த மார்ச் மாதம் சட்டிஸ்கர் மாநிலத்தின் மூன்று கிராமங்களை உருத்தெரியாமல் சிதைத்துவிட்டன. தேடுதல் வேட்டை என்ற பெயரில் துணை இராணுவமும், சட்டிஸ்கர் மாநில போலீசும் இணைந்து ஐந்து நாட்கள் நடத்திய இந்தத் தாக்குதலில் மூன்று அப்பாவிகள் கொல்லப்பட்டனர்; பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட்டனர்; முன்னூறுக்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன; -ற்றுக்கணக்கான அப்பாவிகள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்; மேலும், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்யச் சென்ற சுவாமி அக்னிவேஷ் உள்ளிட்ட சமூக சேவகர்களையும் மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்த செயல்வீரர்களையும் கூட அரசுப் படைகள் தாக்கி விரட்டியடித்து, பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்களுக்கு எந்தவிதமான நிவாரண உதவியும் கிடைத்துவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்து செயல்பட்டன.

சட்டிஸ்கர் மாநில அரசு மாவோயிஸ்டுகளையும், பழங்குடியின மக்களையும் வேட்டையாடுவதற்காகவே சல்வாஜூடும் என்ற குண்டர்படையை நடத்தி வந்தது. இந்தப் படையினரின் கொலைவெறியாட்டமும் மனித உரிமை மீறல்களும் அம்பலமானதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றம் இப்படையைக் கலைக்குமாறு சட்டிஸ்கர் அரசிற்கு உத்தரவிட்டது. இதன்படி, தற்போது சல்வாஜூடும் கலைக்கப்பட்டுவிட்டதாக அரசு கூறினாலும், கோயா கமாண்டோஸ் என்ற பெயரில் மற்றொரு அரசு கூலிப்படையை உருவாக்கி, அதில் சல்வாஜூடுமில் இருந்த கூலிப்படையினரை இணைத்துக் கொண்டிருக்கிறது. பழங்குடியின மக்களைக் கொண்ட படையைப் போல இதனைக் காட்டுவதற்காகவே, கோயா என்ற பழங்குடியின சமூகத்தின் பெயரை இக்கூலிப்படைக்கு வைத்து ஊரை ஏய்த்து வருகிறது, சட்டிஸ்கர் மாநில அரசு.

இவ்வாறு அமைக்கப்பட்ட 200 கோயா கமாண்டோக்களையும், மத்திய ரிசர்வ் போலீசின் கோப்ரா படைப் பிரிவின் 150 சிப்பாய்களையும் கொண்ட கூட்டுப் படையைக் கொண்டு, மொர்பள்ளி, திம்மாபுரம், தர்மேத்லா ஆகிய மூன்று 'மாவோயிஸ்டு ஆதரவு' கிராமங்களின் மீது ஏவி தாக்கத் திட்டமிட்டது, சட்டிஸ்கர் மாநில அரசு. அதன்படி, இந்த அரசு பயங்கரவாதத் தாக்குதலின் முதல் இலக்காக மொர்பள்ளி அமைந்தது.

கடந்த மார்ச் மாதம் 11-ஆம் தேதி அதிகாலை வேளையில் மொர்பள்ளியைச் சுற்றி வளைத்த படையினர் வானத்தை நோக்கிச் சுட்டவாறு முன்னேறினர். அரசுப் படைகள் தமது கிராமத்தைச் சுற்றி வளைத்துத் தாக்கப் போவதை உணர்ந்துகொண்ட கிராம மக்கள் காட்டுக்குள் ஓடிச்சென்று தப்பித்துக் கொள்ள முயன்றனர். ஆனால், அனைவராலும் அவ்வாறு ஓடி ஒளிய முடியவில்லை. அச்சமயத்தில் புளியமரத்தில் ஏறிப் பழங்களை உலுக்கிக் கொண்டிருந்த மாதவி சுல்லாவால் வேகமாக இறங்கி ஓட முடியவில்லை. அவரைச் சுட்டுத் தள்ள முயன்ற படையினரிடம் அவரது மனைவி, ''சுட வேண்டாம்'' எனக் கெஞ்சியதையும் கேளாமல், அவர்கள் தமது கொலைவெறி அடங்கும் வரை சுல்லாவைக் குறிவைத்துச் சுட்டுக் கொண்டே இருந்தனர். துப்பாக்கி ரவைகளால் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்ட சுல்லா மரத்திலேயே பிணமானார். படை வீரர்கள் மொர்பள்ளியை விட்டு வெளி

அரசு பயங்கரவாதப் படைகளால் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட தனது வீட்டின் முன் கண்கலங்கி அமர்ந்திருக்கும் பழங்குடியினப் பெண்.





படிப்பகம்

www.padippakam.com

யேறும் வரை சுல்லாவின் பிணம் மரத்திலேயே தொங்கிக் கொண்டிருந்தது.

அடுத்ததாக அப்படை, அயிம்லா காகி என்ற தாயைச் சுற்றிவளைத்துப் பிடித்துக் கொண்டது. அவரது மகள்கள் கண்ணெதிரேயே அயிம்லா காகி பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டார். அது மட்டுமன்றி, அச்சிப்பாய்கள் அவர் வைத்திருந்த 10 ஆயிரம் ரூபாயையும் அபகரித்துக் கொண்டனர்.

மேலும், 37 வீடுகளைத் தீக்கிரையாக்கிவிட்டு, அன்று மதியம் மொர்பள்ளியிலிருந்து திரும்பிச் சென்ற அப்படையினர், தமது வழியில் எதிர்ப்பட்ட மாதவி கங்கா, அவரது மகன் பீமா மற்றும் மகள் ஹரே ஆகியோரை பிடித்துக் கொண்டு போய், மொர்பள்ளிக்கு அருகிலுள்ள சிந்தால்னர் போலீசு நிலையத்தில் சட்டவிரோதமாகச் சிறைவைத்தனர். அக்கொட்டடியிலேயே ஹரேவை விடியவிடியச் சித்திரவதை செய்த சிப்பாய்கள், அவரைப் பாலியல் வல்லுறவு தாக்குதலுக்கும் ஆளாக்கினர். மாதவியும், பீமாவும் மாவோயிஸ்டுகளுக்கு உதவியதாகக் கூறப்பட்டு, அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டனர். மொர்பள்ளியைச் சேர்ந்த பெண்கள் ஒன்று திரண்டு சிந்தால்னர் போலீசு நிலையத்தை முற்றுகையிட்ட பிறகே மாதவி குடும்பத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.



அரசு பயங்கரவாதப் படைகள் நடத்திய தாக்குதலில் அடித்து நொறுக்கப்பட்ட தனது வீட்டைக் கண்டு திகைத்துப் போய் நிற்கும் பாதிக்கப்பட்ட பழங்குடியின விவசாயி.

மொர்பள்ளி கிராமத்தில் மாவோயிஸ்டுகள் ஆயுதத் தொழிற்சாலையொன்றை நடத்திவந்ததாகக் கூறி இத்தாக்குதலை நடத்தியிருக்கும் அரசு, அக்கிராமத்தில் ஆயுதத் தொழிற்சாலை இருந்ததற்கான சுவட்டைக் கூடக் காட்டவில்லை. மொர்பள்ளியை மாவோயிஸ்டுகளின் கோட்டையைப் போலச் சித்தரித்தது அரசு. ஆனால், அக்கிராமத்தில் இருப்பதோ மாவோயிஸ்டுப் போராளிகளுக்காக மக்கள் எழுப்பியிருந்த 15 அடி நினைவுத்தூண் மட்டும்தான்.

மொர்பள்ளி கிராமத்தையடுத்து, மார்ச் 13 அன்று கோயா கமாண்டோக்கள் மட்டும் தனியாகச் சென்று திம்மாபுரம் என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். திம்மாபுரம் கிராமத்திற்குச் சென்றுகொண்டிருந்தபொழுதே, பர்சே பீமா, மனு யாதவ் என்ற இரு கிராமவாசிகளைச் சிறைபிடித்துக் கொண்டது இக்கூலிப்படை. கோயா படையின் வருகையைத் தெரிந்துகொண்ட அக்கிராம மக்கள் காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டனர்.

வெறிச்சோடிக் கிடந்த திம்மாபுரம் கிராமத்திற்குள் நுழைந்த அப்படை, கிராம மக்கள் தமது வீடுகளில் விட்டுச் சென்றிருந்த கோழிகளையும் ஆடுகளையும் வெட்டித் தின்றதோடு, கிராமவாசிகள் திரும்பும் வரைக் காத்திருக்க முடிவு செய்து அங்கேயே இரவு தங்கியது. மறுநாள் அதிகாலையில் திம்மாபுரத்திலிருந்த கோயாக்களை மாவோயிஸ்டுகள் தாக்கினர். மதியம் வரை நீண்ட இந்தச் சண்டையில் மூன்று கோயா கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்; ஒன்பது பேர் காயமடைந்தனர். மதியத்திற்குப் பிறகு மாவோயிஸ்டுகள் பின்வாங்கித் திரும்பிவிட அன்று இரவும் கோயாக்கள் அங்கேயே தங்கியிருந்து மீதமிருந்த கோழிகளையும், ஆடுகளையும் வெட்டித் தின்றனர்.

மூன்றாம் நாள் கோயா படையினர் திம்மாபுரத்தை விட்டு வெளியேறியபோது, ஐம்பதிற்கும் மேற்பட்ட வீடுகளும் தானியக் கிடங்குகளும் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. அப்படை, தான் சிறைபிடித்து வைத்திருந்த இருவரில் பர்சே பீமாவைக் கோடரியால் பிளந்து கொன்றுவிட்டுச் சென்றது. அவர்கள் திரும்பிச் சென்ற பின்னர் பீமாவின் மனைவி வந்து பார்க்கும் போது, கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு, நெஞ்சில் பாய்ந்த கோடரியுடன் பீமா இரத்த வெள்ளத்தில் முழங்காலிட்டபடி இறந்து கிடந்தார். மூன்று நாட்கள் நடந்த இந்தப் படையெடுப்பில் வெறும் கையோடு திரும்ப விரும்பாத கோயா படைக்கு, ஒரேயொரு ஒரு மாவோயிஸ்டின் உடலாவது தேவைப்பட்டது. கோயா படையனரால் சிறைபிடிக்கப்பட்ட மனு யாதவ் சிந்தால்னர் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு, மாவோயிஸ்டு என முத்திரை குத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தர்மேத்லா கிராமம் மார்ச் 16-ஆம் தேதி கோயா படையினரால் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் அக்கிராமத்திலிருந்த 200-க்கும் அதிகமான வீடுகளும் தானியக் கிடங்குகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அக்கூலிப் படையால் பிடித்துச் செல்லப்பட்ட அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாதவி ஹண்டா, மாதவி அயிடா ஆகிய இருவரும் எங்கிருக்கிறார்கள், எப்படியிருக்கிறார்கள் என்பது இன்றுவரை மர்மமாக உள்ளது. அவர்கள் போலி மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கக்கூடும் எனக் கிராமவாசிகள் கருதுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

தர்மேத்லா கிராமத்தின் மீதான தாக்குதலின் போது படையினரிடம் சிக்கிய மாதவி ஹிட்மே தனது ஒருபக்கப் பார்வையையே இழந்துவிட்டார். அரசுப் படைகள் தமது கிராமத்தைத் தாக்கத் தொடங்கியதை அடுத்து, ஹிட்மே தனது நகைகள், பணம் அனைத்தையும் கட்டியெடுத்துக் கொண்டு காட்டுக்குள் ஓடினார். அப்பொழுது தன்னை வழிமறித்த நான்கு சிப்பாய்கள் தாக்கியதில் மயங்கிச் சரிந்துவிட்டதாகக் கூறும் ஹிட்மே, நினைவு திரும்பி கண்விழித்துப் பார்த்த போது, உடம்பில் ஒட்டுத் துணிகூட இல்லாமல் நிர்வாணமாக்கப்பட்டுக் கிடந்ததாகவும் கூறுகிறார். அவரது நகை மற்றும் பணத்தை அபகரித்துக் கொண்ட படையினர், அவரை மிருகத்தனமாகவும் தாக்கியுள்ளனர். இதில் அவரது முகத்தின் ஒரு பகுதி சிதைந்து, இடது கண்ணின் பார்வைத் திறனே போய்விட்டது.



சல்வாஜூடும் குண்டர்கள் தன் மீதும், தனது ஆதரவாளர்களின் மீதும் நடத்திய தாக்குதலின் பொழுது வீசியெறிந்த கற்களைக் காட்டும் வாமி அக்னிவேஷ்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இந்தத் தாக்குதல் குறித்து ஊடகங்களில் எந்தச் செய்தியும் வந்து விடாமல் தடுப்பதில் அரசு மிகுந்த முனைப்பு காட்டியது. பத்திரிகையாளர்கள் உடனடியாக அந்த கிராமங்களுக்குச் சென்றுவிடாமல் போலீசாரால் தடுக்கப்பட்டனர். தாக்குதல் நடந்து பல நாட்களுக்குப் பிறகே பத்திரிக்கையாளர்களால் அங்கே செல்ல முடிந்தது. அதுவும் அரசுப் படையினருக்குத் தெரியாமல் காட்டு வழியில் இரகசியமாகச் செல்ல வேண்டியிருந்தது. சட்டிஸ்கர் மாநில எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் உண்மை நிலையை அறிய முயன்றபோது, அவர்களையும் அக்கிராமத்திற்குள் செல்ல விடாமல் போலீசார் தடுத்து நிறுத்தி விட்டனர். ஒரு ஈ, காக்கைகூட காட்டுக்குள் செல்வதை அனுமதித்துவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்தார், இந்தத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்திய சிறப்பு போலீசு கண்காணிப்பாளரான கல்லூரி.

மார்ச் மாத இறுதி வாரத்தில் இத்தாக்குதல் குறித்த உண்மை நிலவரங்கள் ஊடகங்கள் மூலம் வெளிச்சத்திற்கு வந்த பிறகு, தாக்குதலில் பாதிக்கப்பட்டு, வீடு, பணம், தானியம் - என அனைத்தையும் இழந்து, காட்டில் நிராதரவாக நிற்கும் கிராம மக்களுக்கு உதவுவதற்காகத் தனது ஆதரவாளர்களுடனும், நிவாரணப் பொருட்களுடனும் அக்கிராமங்களுக்குச் செல்ல முயன்றார், சுவாமி அக்னிவேஷ். இவர், மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மைய அரசால் நியமிக்கப்பட்ட தூதுவர். சில மாதங்களுக்கு முன்னர் மாவோயிஸ்டுகளால் கடத்திச் செல்லப்பட்ட போலீசாரை விடுவிக்கும் பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகித்தவர். அது மட்டுமன்றி, காட்டு வேட்டையால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்குத் தொடர்ந்து உதவி வருபவர். மார்ச் 11 தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்க இவர் சட்டிஸ்கர் போகும் முன்பே, அம்மாநில போலீஸ் டி.ஐ.ஜி.-யிடம் இது குறித்துப் பேசி, காட்டுக்குள் செல்ல அனுமதியும் வாங்கியிருந்தார்.

ஆனால், மார்ச் 26-ஆம் தேதி அதிகாலை இவரும் இவரது குழுவினரும் தொர்னாபால் என்ற நகரத்தில் -ற்றுக்கணக்கான சல்வாஜூடும் குண்டர்களால் வழிமறிக்கப்பட்டனர். இவர்களைத் திரும்பிப் போகும்படி முழக்கமிட்ட அக்கூலிப் படை, கும்பல் சுவாமி அக்னிவேஷ் சென்ற வண்டியை சூழ்ந்துகொண்டு தாக்கியது. அவர்களிடமிருந்து தப்பிய குழுவினர், முதலமைச்சர் இராமன் சிங்கைத் தொடர்புகொண்டு நடந்தவற்றை விளக்கினர். முதல்வர் இராமன் சிங், அவர்களின் பாதுகாப்பிற்கு உத்திரவாதமளித்ததோடு, நிவாரணப் பொருட்களை எடுத்துக் கொண்டு சென்று கொடுக்கும்படியும் கூறியிருக்கிறார்.

முதல்வரின் இந்த உத்திரவாதத்தையடுத்து, நண்பகலில் இக்குழுவினர் மீண்டும் தொர்னாபால் வந்த போது, அங்கே மூவாயிரத்திற்கும் அதிகமான சல்வாஜூடும் குண்டர்கள், துப்பாக்கி, கத்தி, இரும்புக் கம்பி போன்ற ஆயுதங்களோடு, இக்குழுவினரைச் சூழ்ந்துகொண்டு தாக்கினர். அக்கூலிப்படை கும்பல் இம்முறை அக்னி

**சட்டிஸ்கரில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கொட்டிக் கிடக்கும் கனிம வளங்களை எவ்விதமான எதிர்ப்பும் இன்றிப் பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையடிப்பதை உத்திரவாதப்படுத்த வேண்டும். அதற்காகத்தான் இத்தனை தாக்குதல்களும் அழித்தொழிப்புகளும் பழங்குடியினர் மீது ஏவிவிடப்படுகின்றன.**



படிப்பகம்

வேஷை, அவரது தலைப் பாகையைப் பிடித்து இழுத்துச் சாலையில் தள்ளி, கற்களைக் கொண்டு தாக்கியது. இதனைத் தடுக்க முயன்ற பத்திரிக்கையாளர்கள் மீதும், குழுவிலிருந்த மற்றவர்கள் மீதும் கற்களை வீசித் தாக்கியது, அச்சமூக விரோதக் கும்பல். ''ஒரு புறம் தங்களைக் கிராமத்திற்குச் செல்ல அனுமதித்துவிட்டு, மறு புறம் இவ்வாறு குண்டர்களை ஏவி விட்டுத் தங்களைத் தாக்கியதை தற்செயலானதாகப் பார்க்க முடியாது. சிறப்புப் போலீஸ் எஸ்.பி. கல்லூரியால் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதல் இது'' என அக்னிவேஷ் சட்டிஸ்கர் அரசின் மீது குற்றஞ்சுமத்தியிருக்கிறார்.

மேலும் அவர் இது குறித்துக் கூறும் போது, ''துப்பாக்கியேந்திய ஒருவர் என்னைக் கொல்ல விரும்புவதாகக் கூறக் கேட்டது மிகவும் பயங்கரமான தருணம்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பயத்தைத் தான் பழங்குடியினரிடமும், அவர்களுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்களிடமும் அரசு உருவாக்க முனைகிறது. பழங்குடியினருக்கு மருத்துவ உதவிகளைச் செய்துவந்த பினாயக் சென்னைப் பொய்யாகக் குற்றம் சாட்டிச் சிறையில் தள்ளினார்கள். பழங்குடியினரைக் காணச் சென்ற மேதா பட்கரை கல் வீசித் தாக்கினார்கள். இன்றோ, மனிதாபிமான உதவிகளைச் செய்யச் சென்ற அக்னிவேஷையும் துரத்தித்துரத்தித் தாக்கியுள்ளனர். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் சட்டிஸ்கரில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கொட்டிக் கிடக்கும் கனிம வளங்களை எவ்விதமான எதிர்ப்பும் இன்றி பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையடிப்பதை உத்திரவாதப்படுத்த வேண்டும். அதற்காகத்தான் இத்தனை தாக்குதல்களும் அழித்தொழிப்புகளும். இத்தாக்குதல்களை, ''நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் தவிர்க்கவியலாத நடவடிக்கைகள்'' எனத் தாராளமயத் தாசர்கள் நியாயப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

● அன்பு

# அணு மின்உற்பத்திக்குத் தொழிலாளர் பலிகிடா!

**ஜப்பானின் அணு மின்நிலையங்களில் கதிர்வீச்சு நிறைந்த ஆபத்தான வேலைகள் ஒப்பந்தத் தொழிலாளர்களின் தலையில் சுமத்தப்படுகின்றன.**

ஜப்பானில் கடந்த மார்ச் 11 அன்று ஏற்பட்ட பூகம்பம் - சுனாமியால், ஃபுகுஷிமா டாய்ச்சி அணு மின்நிலைய அணு உலைகள் பகுதியளவிற்கு உருகிப் போனதையடுத்து, உலகெங்குமே அணு உலைகளின் பாதுகாப்பு குறித்தும், அவை ஏற்படுத்தும் கதிர்வீச்சு அபாயம் குறித்தும் அச்சங்கள் எழுப்பப்பட்டு வருவதையும், அணு மின் உலைகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்து வருவதையும் எள்ளளவும் பொருட்படுத்தாது, மராட்டிய மாநிலம் ஜெய்தாப்பூரில் 10 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட 6 அணு உலைகளுடன் கூடிய மிகப் பெரிய அணுமின் நிலைய வளாகத்தை அமைத்திட மையஅரசு தீவிரமாக முயன்று வருகிறது. இந்த அணு மின் நிலைய வளாகத் திட்டத்தை எதிர்த்து அப்பகுதி மக்கள் நடத்தி வரும் போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மாண்டு போனார்.

''இந்த அணு உலைகளின் பாதுகாப்பு குறித்து மக்கள் அக்கறை கொள்ளத் தேவையில்லை; அது எங்கள் பொறுப்பு'' எனத் திமிராகப் பதில் அளித்து வருகிறார், சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ். ''உலகின் முன்னணி கட்டுப்பாட்டு அமைப்புகளின் தரநிர்ணயங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு முழுப்பாதுகாப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்'' என்று இந்திய அணுசக்திக் கழகமும் உறுதி அளித்துள்ளது.

எனினும், செயல் இழந்து போன ஜப்பானின் ஃபுகுஷிமா அணு மின் நிலையம் மட்டுமின்றி, ஜப்பானில் உள்ள 55 அணு மின் நிலையங்களில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தற்பொழுது கசிந்து வெளியே வரும் செய்திகள், இந்திய அணு உலைகளின் பாதுகாப்பு குறித்து இந்திய அணுசக்திக் கழகம் தரும் உத்தரவாதங்களை முழுமையாக நம்பிவிட முடியாது என்பதைத்தான் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, ஜப்பானின் அணு மின் நிலையங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களே கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளனர்; அப்பாதிப்புகள் வெளியே தெரிந்துவிடாதபடி இருட்டடிப்பு செய்யப்படுகின்றன எனும்பொழுது, தொழில்நுட்பத்தில் பின்தங்கிய, மக்களுக்குப் பொறுப்பற்ற அதிகார வர்க்கம் நிறைந்துள்ள இந்தியாவின் அணு மின் நிலையங்களின் பாதுகாப்பு எந்த விதத்தில் மேம்பட்டதாக இருந்துவிட முடியும்? அணு மின் நிலையங்களில் வேலை பார்க்கும் தொழிலாளர்களையே அணுக் கதிர் வீச்சு பாதிப்பிலிருந்து பாதுகாத்திட முடியாத நிலையில், அணு மின் நிலையங்களைச் சுற்றி வாழும் இலட்சக்கணக்கான மக்களின் பாதுகாப்பிற்குத் தரப்படும் உத்தரவாதத்தை எந்த அளவிற்கு நம்ப முடியும்?

• • •

தனது மின்தேவைக்கு பெருமளவு அணுசக்தியை நம்பியுள்ள ஜப்பானில், வணிகரீதியான அணு மின்நிலையங்களும் உள்ளிட்டு 55 அணு உலைகள் இயங்கி வருகின்றன. அந்நாட்டில் அணு உலைகளின் உற்பத்தி, கட்டுமானம், பராமரிப்பு போன்ற கேந்திரமான பணிகள் தோஷிபா, ஹிட்டாச்சி போன்ற



படிப்பகம்

www.padippakam.com

ஏகபோக நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அணு உலைகளை இயக்கும் பொறுப்பு டோக்கியோ எலெக்ட்ரிக் போன்ற தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த அணு உலைகளின் பாதுகாப்பை ஜப்பான் அரசின் அணுசக்தி மற்றும் தொழில் பாதுகாப்பு முகமை மேற்பார்வையிட்டு வருகிறது.

● ஜப்பானின் அணுசக்தி மற்றும் தொழில் பாதுகாப்பு முகமை மார்ச் 2010 - இல் வெளியிட்ட ஒரு புள்ளி விவரத்தின்படி, அந்நாட்டிலுள்ள 18 வணிகரீதியான அணு மின்நிலையங்களில் பணிபுரியும் 83 ஆயிரம் தொழிலாளர்களில் 88 சதவீதம் பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஆவர். இந்த ஒப்பந்த தொழிலாளர்கள் அணு சக்தியில் நிபுணத்துவமோ, அதில் முறையான பயிற்சியோ இல்லாதவர்கள். ஃபுகுஷிமா அணு உலையில் நேர்ந்த விபத்தால் ஏற்பட்டுள்ள அணுக்கதிர் கசிவைக் கட்டுப்படுத்தும் பொறுப்பில் இந்த அனுபவமற்ற தொழிலாளர்கள்தான் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

இதே போன்று, அணு மின்நிலையங்களில் கதிரியக்க அபாயம் நிறைந்த வேலைகளான, அணு உலைகளில் நீரற்று வறண்டு போன தொட்டிகளைச் சுத்தம் செய்வது; எரிபொருள் தீர்ந்து போய்விட்ட பின், அவை வைக்கப்படும் தொட்டிகளைச் சுத்தம் செய்வது; அணுக் கழிவுகளை உருளைகளில் அடைப்பது போன்றவையும் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களின் தலையில்தான் சுமத்தப்படுகின்றன. சாதாரணக் கட்டுமானத் தொழிலாளர்களும், கூடுதல் வருமானம் தேவைப்படுகின்ற விவசாயிகளும் கதிரியக்கம் நிறைந்த அபாயகரமான வேலைகளைச் செய்ய அதிகச் சம்பள ஆசைகாட்டி அழைத்து வரப்பட்டு, இவ்வேலைகளில் தள்ளப்படுகின்றனர்.

● அணு உலைகளைப் பராமரிக்கும் தோஷிபா, ஹிட்டாச்சி போன்ற நிறுவனங்களில் ஒப்பந்ததாரர், உள் ஒப்பந்ததாரர், அவருக்கும் கீழ் ஒப்பந்தம் எடுத்திருப்பவர் எனப் பலபடித்தான முறைகளில் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூலிகளாகச் சேர்க்கப்படுகின்றனர். இந்தப் படிநிலை அமைப்பு கீழே செல்லச்செல்ல, அதற்கு ஏற்றவாறு அவ்வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக் கூலிகளுக்குக் கொடுக்கப்படும் கூலியும் குறைந்து கொண்டே போகும்; பாதுகாப்பு அம்சங்களின் தரமும் கீழே விழுந்துவிடும்.

● கதிர்வீச்சு நிறைந்த பகுதியில் உள்ள வால்வுகளைக் கையாளுவதுகூட அபாயம் நிறைந்ததாகும். இப்பகுதிகளில் உள்ள வால்வைத் திறந்த ஒரு சில நொடிகளிலேயே கதிர்வீச்சு அதிகரித்து விடும். எனவே, வால்வைக் கையாளும் வேலையில். தொழிலாளர்கள் சுழற்சி முறையில் உடனுக்குடன் மாற்றப்பட்டுக் கொண்டே இருப்பர். இத்தகைய சுழற்சி முறையில் ஒரே வேலையைப் பல தொழிலாளர்கள் செய்கின்றனர். வேலைச்சூழலில் எந்நேரமும் கதிர்வீச்சின் அளவை அளவிட்டுக் கொண்டே இருப்பது மிக முக்கியமானதாகும். இதற்கென கதிர்வீச்சின் அளவைக் கணக்கிடும் டோசிமீட்டர்களைத் தொழிலாளர்கள் கையோடு எடுத்துச் செல்வர். டோசிமீட்டரில் அளவு 50 மில்லி சீவர்ட்ஸைத் தாண்டி விட்டால், கதிரியக்கம் உடம்பைத் துளைத்து விடும். இந்த அளவை எட்டும்போது அவர்களின் அன்றைய வேலை முடிவுக்கு வந்து, உலையிலிருந்து வெளியேற்றப்படுவர்.




அணு மின்நிலையங்களை மூடக் கோரி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிறுமி.

கதிர் வீச்சு அபாயம் நிறைந்த பகுதிகளில் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் கதிர்வீச்சால் தாக்கப்பட்டு, அதனால் தங்களுக்கு ஏற்படும் சிராய்ப்புகளும் வெட்டுக்காயங்களும் வெளியே தெரிய வந்தால், கதிர்வீச்சுப் பிரச்னை அம்பலமாகித் தங்கள் வேலை அதனால் பறிக்கப்படலாம் எனும் அச்சத்தால், அக்காயங்களைத் தோலின் நிறங்கொண்ட பேண்டேஜ்களால் மறைத்தபடியே பணிபுரிகின்றனர்.

பகுதியளவு உருகிப் போன ஃபுகுஷிமா அணு மின்நிலையத்தில் இது போன்ற அபாயகர

> **சாக்கடை அடைப்பைச் சுத்தம் செய்ய அதனுள் இறங்கும் தொழிலாளிக்குத் தேவைப்படும் சாதாரண பாதுகாப்பைக்கூடச் செய்து தர மறுக்கும் இந்திய அரசு, இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள அணு உலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கச்சிதமாகச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவதைக் கேட்டு நகைக்கத்தான் முடியும்!**



படிப்பகம்

www.padippakam.com

மான வேலைகளை ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு செய்வதற்காக, அவர்களுக்கு அதிக சம்பளம் தருவதாக - நாளொன்றுக்கு 350 அமெரிக்க டாலர் முதல் 1,000 டாலர் வரை - ஆசை காட்டி அழைத்துச் செல்லப்படுவதாகக் கூறுகிறார், அம்மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளியாக வேலை பார்த்து வந்த மாஸாயுகி இஷிஜாவா.

● 1980 - இல் வருடாந்திர பராமரிப்பிற்காக ஃபுகுஷிமா அணு உலை எண் -1 நிறுத்தப்பட்டபோது, எரிபொருள் கிடங்கின் உள்ளே இறங்கி, அதன் சுவர்களில் ஒட்டியிருந்த அணுக்கழிவுகளை ப்ரஷ்களாலும், கந்தல் துணிகளாலும் அழுத்தித் துடைத்துச் சுத்தம் செய்ததைப் பயங்கரமான அனுபவமாகக் கருதும் 64 வயதான டாக்கேஷி கவாகாமி, அவ்வேலையை 20 நிமிடங்களுக்கு மேல் செய்ய முடியாது என்கிறார். ''நான் மயக்கமடையப் போவதாக உணர்ந்தேன்; நான் என்ன செய்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை; தாங்கமுடியாத வெப்பத்தால் ஏற்பட்ட வியர்வையால் தெப்பமாக நனைந்து, எனது வியர்வையிலேயே நான் மூழ்கிப் போய்விடுவதாக நினைத்தேன்'' என அந்த அனுபவத்தை நினைவு கூறும் கவாகாமிக்கு, வயிற்றிலும் பெருங்குடலிலும் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.



ஜெய்தாப்பூர் அணு மின்நிலையத் திட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து ரத்னகிரியில் நடந்த ஆர்ப்பாட்டத்தைத் தடியடி நடத்திக் கலைக்க முயலும் போலீசார்.

● டோக்கியோ எலெக்ட்ரிக் நிறுவனம் அரசாங்கத்திற்கு அனுப்பிய அறிக்கையில் (அக்டோபர் 2010), டர்பைன் கட்டிடத்தினை ஒப்பந்தத் தொழிலாளர் ஒருவர் துடைத்துச் சுத்தப்படுத்தி வந்தபொழுது, தற்செயலாக சுத்தப்படுத்தப் பயன்படுத்திய துண்டால் தனது முகத்தைத் துடைத்ததால், அளவுக்கதிகமான கதிர்வீச்சுக்கு அவர் ஆட்பட்ட விபத்து குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விபத்துக்குப் பின் அந்நிறுவனம் கதிர்வீச்சு நிறைந்த பகுதிகளைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களுக்கு, இனி கதிர்வீச்சு பாதிப்பு ஏற்படுத்தாத சிறப்பு துண்டுகள் வழங்கப்படும் என அறிவித்தது. அதாவது, இந்தத் தனியார் ஏகபோக நிறுவனங்கள், தொழிலாளர்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்ட பிறகுதான், பாதுகாப்பு அம்சங்கள் குறித்துப் பேசுகின்றன என்பதைத்தான் இவ்விபத்து அம்பலப்படுத்துகிறது.

● ஏப்ரல் 7-ஆம் தேதி நிலவரத்தின்படி, ஃபுகுஷிமா மின்நிலையத்தில் இருந்த 21 ஊழியர்களுள் ஒவ்வொருவருமே 100 மில்லி சீவெர்ட்ஸ் அளவுக்கும் மேலான கதிர்வீச்சுக்கு ஆளாகியிருப்பது தெரியவந்துள்ளது. 100 மில்லி சீவெர்ட்ஸ் என்பது நெருக்கடி காலகட்டத்தின் கதிர்வீச்சளவாகும். இதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாக கதிர்வீச்சு நிறைந்த தண்ணீரில் இறங்கி வேலை செய்யுமாறு நிர்பந்திக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் கதிர்வீச்சினால் காயமடைந்தனர். கதிர்வீச்சின் பாதிப்பைக் குறைத்துக் காட்டுவதற்காகவே, தற்பொழுது இந்த நெருக்கடி காலக் கட்ட கதிர்வீச்சின் அளவு 100 மில்லி சீவெர்ட்ஸிலிருந்து 250 மில்லி சீவெர்ட்ஸாக உயர்த்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அம்சங்களின் தரம் அதிகரிக்கப்பட்டதால், தொழிலாளர்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்படுவது 1990-களில் இருந்து குறைந்து வருவதாக ஜப்பான் அரசு கூறி வருகிறது. ஆனால், எழுபதுகளில் நிறுவப்பட்ட அணு உலைகளின் ஆயுள் முடியும் நிலைக்கு வந்து கொண்டிருப்பதால், 2000-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவற்றில் பல்வேறு விபத்துகள் ஏற்பட்டு, பணிப் பாதுகாப்பு குறைந்து வருகிறது. எனவே, ஒரு வேலையை ஒரே குழு தொடர்ச்சியாகச் செய்யும் முறையை மாற்றி, அதே வேலையைப் பல குழுக்கள் சுழற்சி முறையில் செய்யும் முறையை அமல்படுத்தி, கதிர்வீச்சின் பாதிப்பைக் குறைத்துக் காட்டி வருகின்றனர். அரசின் கோப்புகளில் தனியொரு தொழிலாளிக்கு ஏற்படும் கதிர்வீச்சின் பாதிப்பு குறைவாகக் காட்டப்படும் அதே சமயம், கதிர்வீச்சு நிறைந்த சூழலில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதுதான் உண்மை.

தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னேறிய நிலையிலுள்ள ஜப்பானிலேயே உயிருக்குப் பெரும் அச்சுறுத்தலாகவும், புற்றுநோய் போன்ற உயிர்க்கொல்லி நோய்களுக்குக் காரணமாகவும் அணு உலைகள் இருப்பது ஃபுகுஷிமா அணு உலைகள் வெடிப்பிற்குப் பின் தெள்ளத் தெளிவாகி விட்டது. பல ஐரோப்பிய நாடுகள் கூட அணு மின் உற்பத்தியைப் பற்றிய மறுபரிசீலனைக்குத் தயாராகிக் கொண்டுள்ளன. ஆனால், சாக்கடை அடைப்பைச் சுத்தம் செய்ய அதனுள் இறங்கும் தொழிலாளிக்குத் தேவைப்படும் சாதாரண பாதுகாப்பைக்கூடச் செய்து தர மறுக்கும் இந்திய அரசு, இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள அணு உலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கச்சிதமாகச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறுவதைக் கேட்டு நகைக்கத்தான் முடியும்!

● கதிர்



படிப்பகம்

www.padippakam.com

# அரபு சர்வாதிகாரிகளைத் தாங்கும் அமெரிக்க ஜனநாயகம்

**அமெரிக்க-ஐரோப்பிய ஏகபோக நிறுவனங்களின் வியாபாரக் கூட்டாளிகள்தான் அரபு சர்வாதிகாரிகள்.**

எகிப்து, துனிசியா, பஹ்ரைன், ஏமன், ஜோர்டான், லிபியா உள்ளிட்ட பல்வேறு அரபு நாடுகளில் நடந்து வரும் போராட்டங்கள் பற்றி வெளிவரும் பெரும்பாலான செய்திகள், விமர்சனக் கட்டுரைகள் அந்நாடுகளில் நடந்துவரும் சர்வாதிகார ஆட்சி, போலீசு ஒடுக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகளை அம்பலப்படுத்துவதற்கு அப்பால் செல்லுவதில்லை. குறிப்பாக, இப்போராட்டங்களுக்கும் அந்நாடுகளில் நிலவிவரும் பொருளாதாரக் கட்டமைப்பிற்கும் இடையேயுள்ள உறவு பற்றியோ; அந்நாடுகளில் நிலவிவரும் சர்வாதிகார அல்லது மன்னராட்சிக்கும் தனியார்மயம் - தாராளமயத்திற்கும் இடையேயான உறவு பற்றியோ; அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டுத் தொழிற்கழகங்கள் இச்சர்வாதிகார அல்லது மன்னராட்சியைப் பயன்படுத்திக் கொண்டு அந்நாடுகளின் விவசாயம், தொழில் மற்றும் நிதித் துறைகளையும் கச்சா எண்ணெய் உள்ளிட்ட இயற்கை வளங்களையும் கைப்பற்றிக்கொண்டு கொழுத்த ஆதாயம் அடைந்துவருவது பற்றியோ; அமெரிக்கா இச்சர்வாதிகார அல்லது மன்னராட்சியைப் பாதுகாப்பதற்காகவே எகிப்திற்கும், துனிசியாவிற்கும், ஜோர்டானுக்கும் பொருளாதார, இராணுவ நிதியுதவிகளை அளித்துவருவது பற்றியோ முதலாளித்துவ அரசியல் விமர்சகர்கள் முழுமையாக எழுதுவதில்லை.

அகண்ட அரபு தேசம் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அமெரிக்கா - இசுரேல் கூட்டணிக்கு எதிராகவும் செயல்பட்டு வந்த எகிப்து, 1978 - இல் அமெரிக்காவின் முன்னிலையில் இசுரேலோடு அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டது. இசுரேலுக்கும் அரபு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் இசுரேல் பெற்ற வெற்றியும், எகிப்தில் நாசரின் மறைவுக்குப் பின் அன்வர் சதாத் அதிபராக இருந்ததும் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாவதற்குப் பின்னணியாக இருந்தன. இந்த ஒப்பந்தம் கையெழுத்தான பின், அரபு நாடுகளின் மத்தியில் அமெரிக்கா - இசுரேல் கூட்டணியின் நலனை முன்னிறுத்திப் பாதுகாக்கும் அடியாளாக எகிப்து மாறியது.

எகிப்துக்கும், இ ரேலுக்கும் இடையே செப்.1978-இல், அமெரிக்காவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட இ ரேலிய பிரதமர் மெனாகெம் பிகின் (இடது), எகிப்து அதிபர் அன்வர் சதாத் (வலது) மற்றும் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்டர். (கோப்புப் படம்)



அமெரிக்கா இந்த மாற்றத்திற்குப் பரிசாக எகிப்திற்கு வருடாவருடம் பல -று கோடி டாலர்களை நிதியுதவி என்ற பெயரில் இலஞ்சமாகக் கொடுத்து வந்தது. எகிப்து, தனக்குத் தேவையான ஆயுதத் தளவாடங்களையும், உணவுப் பொருட்களையும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுவதற்கு ஏற்றவாறு இந்த நிதியுதவி அளிக்கப்பட்டது. மேலும், எகிப்தைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் அமெரிக்காவிலிருந்து நுகர் பொருட்களை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பதற்கு ஏற்றவாறு பண்ட இறக்குமதித் திட்டமொன்றையும் தயாரித்துக் கொடுத்ததோடு, அதற்கான நிதியுதவிகளையும் அளித்து வந்தது, அமெரிக்கா. அதாவது, 1978 - க்குப் பின் எகிப்து அமெரிக்காவின் அடியாளாக மட்டுமின்றி, அமெரிக்காவின் சந்தையாகவும் மாற்றப்பட்டது.

எகிப்தில் பொருளாதாரக் கட்டுமானச் சீர்திருத்தங்களை அமுலாக்கும்



படிப்பகம்

www.padippakam.com

நோக்கமும் அமெரிக்க நிதியுதவியின் பின் மறைந்திருந்தது. குறிப்பாக, சோவியத் சமூக ஏகாதிபத்தியம் உடைந்து சிதறி, பனிப்போர் காலக் கட்டம் முடிவுக்கு வந்த பின், எகிப்தில் தனியார்மயம் - தாராளமயத்தைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என நிர்பந்தித்தது, அமெரிக்கா. எகிப்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் 1991 - ஆம் ஆண்டு கையெழுத்தான ஒப்பந்தப்படி, ரொட்டியைத் தவிர, பிற அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் நுகர் பொருட்களுக்கும் வழங்கப்பட்டு வந்த மானியங்கள் வெட்டப்பட்டன; கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது விதிக்கப்பட்டு வந்த வரிகள் குறைக்கப்பட்டன; இறக்குமதிக்கும் அந்நிய முதலீட்டிற்கும் இருந்து வந்த வரம்புகளும் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன; பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது, விவசாயத்தில் தனியார் முதலீட்டிற்கு இருந்து வந்த கட்டுப்பாடுகளை நீக்குவது, விவசாய விளைபொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதில் இருந்த வந்த கட்டுப்பாடுகளை விலக்கிக் கொள்வது ஆகிய சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன.



எகிப்தின் அல்-மஹல்லா நகரில் ஏப்ரல்-2008-இல் நடந்த தொழிலாளர் போராட்டத்தின்பொழுது கைது செய்யப்பட்ட முன்னணியாளர்களை விடுதலை செய்யக் கோரி, அந்நகர போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் தொழிலாளர்கள். (கோப்புப் படம்)

எகிப்தில் அமெரிக்காவின் முதலீட்டை அதிகரிப்பதற்காக அவ்விரு நாடுகளுக்கும் இடையே 1994 - ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான கூட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதன் தொடர்ச்சியாக 1998 - ஆம் ஆண்டு வர்த்தக மற்றும் முதலீட்டிற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியது. மேலும், அமெரிக்க மற்றும் எகிப்தைச் சேர்ந்த கார்ப்பரேட் நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட வர்த்தக சங்கமொன்று, ''அதிபர் கவுன்சில்'' என்ற பெயரில் அமைக்கப்பட்டது. எகிப்தின் (முன்னாள்) அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் மகன் கமால் முபாரக் தலைமையில் இயங்கிய இக்கவுன்சிலில் அமெரிக்காவைச் சேர்ந்த மோடோரோலா, சிட்டி பேங்க், ஜெனரல் எலெக்ட்ரிக், ஃபைசர் உள்ளிட்ட 15 நிறுவனங்கள் உறுப்பினர்களாக இருந்தன. இந்த அதிபர் கவுன்சில் எகிப்தின் தொலைதொடர்பு, வங்கி, சுங்க வரி மற்றும் கார்ப்பரேட் வரிகளில் தனியார்மயம் - தாராளமயத்தைப் புகுத்த ஆலோசனைகளை வழங்கி வந்ததோடு, எகிப்தின் நிழல் அமைச்சரவையாகவும் செயல்பட்டது.

ஹோஸ்னி முபாரக்கைப் பதவி விலகக் கோரும் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில், அமெரிக்க அரசு முபாரக்கோடு பேச்சுவார்த்தை நடத்த விஸ்னர் என்பவரை எகிப்துக்கு அனுப்பி வைத்தது. விஸ்னர் எகிப்துக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றியவர் என்றாலும், தற்பொழுது விஸ்னர் சட்ட ஆலோசகராகப் பணியாற்றிவரும் பேட்டன் பாக்ஸ் என்ற அமெரிக்க நிறுவனம்தான் எகிப்தைச் சேர்ந்த மிக முக்கியமான கார்ப்பரேட் நிறுவனங்களின் முதலீடுகளையும், வியாபாரங்களையும் கவனித்து வருகிறது. மேலும், எகிப்திற்கு ஆயுதத் தளவாடங்களை விற்கும் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பேட்டன் பாக்ஸ்தான் சட்ட ஆலோசகராக இருந்து வருகிறது. எகிப்தின் அரசியலைத் தீர்மானிப்பதில் அமெரிக்க மற்றும் எகிப்தின் கார்ப்பரேட் நிறுவனங்கள் எந்த அளவிற்குச் செல்வாக்கு செலுத்தி வருகின்றன என்பதை இதிலிருந்தே புரிந்து கொள்ளமுடியும்.

அமெரிக்கா திணித்த கட்டுமான சீர்திருத்தங்களின் விளைவாக, அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்கள், அவற்றின் உள்நாட்டுத் தரகர்களைக் கொண்ட சிறு கும்பலிடம் எகிப்தின் பொருளாதாரமே சிக்கிக் கொண்டது. இக்கும்பல் தனது மூலதனத்தையும் இலாபத்தையும் பாதுகாத்துக் கொள்ள அரசு இயந்திரத்தை மிகவும் வெளிப்படையாகவே பயன்படுத்திக் கொண்டது. குறிப்பாக, அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் தலைமையின் கீழ் இருந்த தேசிய ஜனநாயகக் கட்சி, இக்கும்பலின் சங்கமாகவே மாறியது. அரசியலும், கார்ப்பரேட் நிறுவனங்களும் ஓர் உயிர் ஈருடலாக ஒன்றோடு ஒன்று கலந்தன.

மேற்காசியாவிலேயே பெரும் உருக்காலை அதிபரான அகமது இஸ் என்பவர்தான் தேசிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலராகப் பதவி வகித்தார். இவரின் உருக்காலை வியாபாரத்திற்காகவே, அரசு - தனி



படிப்பகம்

www.padippakam.com

யார் கூட்டணியின் கீழ் பல்வேறு அடிக்கட்டுமான வசதிகளை உருவாக்கும் திட்டங்களை ஹோஸ்னி முபாரக் அரசாங்கம் அறிவித்தது. நாடாளுமன்ற விவகார அமைச்சராக இருந்த தலத் முஸ்தபா ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப் போட்டிருந்ததன் காரணமாக வீட்டுமனை வளர்ச்சித் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் அவருக்கு அளிக்கப்பட்டன.

சட்டவிரோதமான ஊழலைவிட, சட்டபூர்வமாக நடந்த இந்த கார்ப்பரேட் பகற்கொள்ளையின் விளைவாக, ஆளும் கும்பலின் சொத்து மதிப்பு எகிறிப் பாய்ந்தது. குறிப்பாக, அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் சொத்து மதிப்பு 300 கோடி அமெரிக்க டாலரில் இருந்து 7,000 கோடி டாலர் வரை இருக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலராக இருந்த அகமது இஸ்ஸின் சொத்து மதிப்பு 1,800 கோடி டாலர், சுற்றுலாத் துறையின் அமைச்சராக இருந்த ஜோஹயர் காரானாவின் சொத்து மதிப்பு 1,300 கோடி டாலர், வீட்டு வசதித்துறை அமைச்சராக இருந்த அகமது அல் மக்ரபியின் சொத்து மதிப்பு 1,100 கோடி டாலர், உள்துறை அமைச்சராக இருந்த ஹபிப் அட்லியின் சொத்து மதிப்பு 800 கோடி டாலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகள் - கார்ப்பரேட் முதலாளிகளுக்கு இணையாக இராணுவ அதிகாரிகளும் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதற்கு வழி ஏற்படுத்தித் தரப்பட்டது. குறிப்பாக, நல்ல இலாபத்தில் இயங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்களை ஒருபுறம் கார்ப்பரேட் முதலாளிகளுக்குத் தாரை வார்த்துவந்த ஹோஸ்னி முபாரக், இன்னொருபுறம் பல பொதுத் துறை நிறுவனங்களை சிவில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து இராணுவத்தின் பொறுப்பில் ஒப்படைத்தார். இதன் மூலம், இராணுவ அதிகாரிகள் கொழுத்த சம்பளம் மற்றும் பல்வேறு சலுகைகளோடு இந்த நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர்.

இன்னொருபுறமோ, அமெரிக்கா வருடாவருடம் எகிப்து இராணுவத்துக்கு வழங்கி வந்த 130 கோடி அமெரிக்க டாலர் (6,500 கோடி ரூபாய்) பெறுமான நிதியுதவி, அந்த நாட்டு இராணுவத்தை அமெரிக்காவின் ஆயுதத்தளவாட ஏகபோக நிறுவனங்களின் வாலாகவே மாற்றியது. அமெரிக்காவின் இந்த நிதியுதவியைப் பயன்படுத்திக் கொண்டு எகிப்திற்கு ஆயுதங்களை விற்றுவந்த ஜெனரல் டைனமிக்ஸ், போயிங், லாக்ஹீட் மார்டின் உள்ளிட்ட பல அமெரிக்க நிறுவனங்கள் எகிப்து இராணுவ அதிகாரிகளைத் தமது தரகர்களாகவும், ''லாபியிஸ்டு'' களாகவும் நியமித்துக் கொண்டன.

எகிப்தின் உள்நாட்டு ஆளும் கும்பல் கார்ப்பரேட் பகற்கொள்ளையின் மூலம் சுருட்டிய பெருஞ்செல்வத்தை வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்கி குவிக்கவும், வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கவும், நிதிச் சூதாட்டத்தில் போடவும், ஆடம்பரமாக வாழவும்தான் பயன்படுத்தியதேயொழிய, உள்நாட்டின் தொழிற்வளர்ச்சிக்கு பயன்படுத்தவில்லை. கட்டுமானத் துறை, சுற்றுலா, ''ஷாப்பிங் மால்'' போன்ற நவீன தொழில் மற்றும் சேவைத் துறைகள் குறைந்த அளவிற்கே புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியதால், பெருவாரியான இளைஞர்கள் தெருவோரம் கடைகள் போடுவது, டாக்ஸி ஓட்டுவது, ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலிகளாக வேலை பார்ப்பது போன்ற அமைப்புசாராத் தொழில்களை நோக்கித் தள்ளப்பட்டனர்.

மாதமொன்றுக்குக் குறைந்தபட்ச கூலியாக 240 அமெரிக்க டாலர்கள் தர வேண்டும் என்ற தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைளும், போராட்டங்களும் ஒடுக்கப்பட்டு, குறைந்தபட்ச கூலியை 100 அமெரிக்க டாலர்களுக்கும் குறைவாக நிர்ணயித்தது, ஹோஸ்னி முபாரக் அரசு. இதனால், 40 சதவீதத்துக்கும் மேலான எகிப்திய மக்கள் நாளொன்றுக்கு வெறும் 100 ரூபாய்க்கும் (2 அமெரிக்க டாலர்கள்) குறைவான தினக் கூலியில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியமான சேவைத் துறைகளில்கூட மறைமுகமாகத் தனியார்மயம் புகுத்தப்பட்டதால், உழைக்கும் மக்கள் இச்சேவைகளைப் பெறுவதில் இருந்து ஒதுக்கித் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக, பெருவாரியான ஏழைக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, அவர்களைக் கூலி வேலைக்கு அனுப்பி வந்தனர்.

அமெரிக்காவிற்கும் பஹ்ரைனுக்கும் இடையேயான தந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ். (கோப்புப் படம்)





படிப்பகம்

www.padippakam.com

இந்த ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பின் ''அமைதி''யைப் பாது காப்பதற்காகவும், மக்கள் மத்தியில் வீசும் பாலஸ்தீன ஆதரவு, இசுரேல் எதிர்ப்பு உணர்வுகளை அடக்கி ஒடுக் கவும் கடந்த முப்பது ஆண்டுகளாக எகிப்து அவசர நிலைக் கொடுங் கோன்மையின் கீழ் இருத்தி வைக்கப் பட்டது. போலீசுக்கும் உளவு அமைப் புகளுக்கும் வரம்பற்ற அதிகாரம் தரப் பட்டு, மக்கள் நிரந்தரக் கண்காணிப் பின் கீழ் வைக்கப்பட்டனர். சாலை யோரத் தடையரண்களும், தேடுதல் நடவடிக்கைகளும் எகிப்திய மக் களின் அன்றாட வாழ்வில் வாடிக்கை யான நிகழ்ச்சிகளாக இருந்தன.



லிபியாவில் கடாஃபியின் ஆட்சியை அகற்றுவதற்காக நேடோ கூட்டணி நாடுகள் தொடுத்துள்ள போரைக் கண்டித்து, இலண்டன் மாநகரில் நடக்கும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

சுயதொழில் தொடங்குவதற்காக வாங்கப்பட்ட கடனை வசூலிக்கும் அதிகாரமும் போலீசுக்குத் தரப்பட்ட தால், கடனைக் கட்டத் தவறும் இளைஞர்கள் சித்திர வதை செய்யப்படுவதும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுவதும் வரைமுறையின்றி நடந்தது. இலஞ்சத்தில் ஊறிப் போயிருந்த போலீசு, பொது மக் களை மிரட்டிப் பணம் பறிக்கும் ரவுடித்தனங்களில் ஈடுபட்டு வந்ததோடு, கார்ப்பரேட் நிறுவனங்கள், கந்துவட்டிக் கும்பலின் நேரடியான அடியாளாகவும் செயல்பட்டு வந்தது. எகிப்தில் முபாரக்கின் சர் வாதிகார ஆட்சிக்கு எதிராக நடந்த போராட்டத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் தன்னெழுச்சி யாகத் திரண்டதற்கு இந்த சமூகப் பின்னணிதான் கார ணமாக அமைந்தது.

எகிப்து சமூகத்தின் இந்தக் குறுக்கு வெட்டுத் தோற்றம் பெருவாரியான அரபு நாடுகளுக்கும் பொருந்திப் போகக் கூடியதுதான். துனிசியாவோடு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மட்டுமின்றி, அணுசக்தி கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளும் அளவிற்கு அமெ ரிக்காவிற்கும், அந்நாட்டின் சர்வாதிகாரியாக இருந்த பென் அலிக்கும் நெருக்கம் நிலவிவந்தது. துனிசிய மக் களை ஒடுக்கிவந்த அந்நாட்டின் இராணுவத்துக்கு அமெரிக்கா வருடாவருடம் 120 இலட்சம் அமெரிக்க டாலர்களை நிதியுதவியாக அளித்துவந்தது. துனிசியா வின் கச்சா எண்ணெய், சுற்றுலா, ஜவுளி, மின் கருவி கள் மற்றும் கனரக இயந்திரத் தொழில்களில் முதலீடு செய்துள்ள ஜெனரல் எலெக்ட்ரிக், கோகோ கோலா, கேட்டர்பில்லர் உள்ளிட்ட -ற்றுக்கும் மேற்பட்ட அமெரிக்க நிறுவனங்களுக்கு பென் அலி அரசின் மனித உரிமை மீறல்கள் தொழில் வளர்ச்சிக்கான நட வடிக்கைகளாகத்தான் தெரிந்தன. பென் அலியின் சர் வாதிகார ஆட்சி இல்லையென்றால், அந்நாட்டின் சந்தையில் தமது நாட்டின் உற்பத்திப் பொருட்களைக் கொண்டுபோய்க் கொட்ட முடியாது என்பதை பிரான்சும், இத்தாலியும், ஜெர்மனியும் உணர்ந்தே இருந்தன.

பஹ்ரைனில் அந்நிய முதலீட்டிற்கு எவ்விதக் கட்டுப்பாடுகளும் கிடையாது என்பது மட்டுமல்ல, கச்சா எண்ணெய் தொழில் தவிர, பிற துறைகளில் முதலீடு செய்துள்ள அந்நிய ஏகபோக நிறுவனங்கள் வருமான வரிகூடச் செலுத்த வேண்டியதில்லை. தமது இலாபத்தை பஹ்ரைனில்தான் மீண்டும் முதலீடு செய்ய வேண்டும் என்ற கட்டாயமும் அந்நிய நிறு வனங்களுக்குக் கிடையாது. அந்நாட்டில் செயல்படும் அந்நிய நிறுவனங்களுக்குத் தமது விருப்பப்படி குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்துக் கொள்ளும் உரி மையும் உண்டு. பஹ்ரைனின் தேசிய எண்ணெய்க் கழ கத்தின் 40 சதவீதப் பங்குகள் அமெரிக்காவின் கால் டெக்ஸ் நிறுவனத்தின் வசம் இருப்பதோடு, அமெரிக் காவின் கடற்படைத் தளமும் பஹ்ரைனில் இயங்கி வருகிறது. லிபியாவில் கடாஃபியின் சர்வாதிகார ஆட் சியைத் தூக்கியெறிய முயன்றுவரும் அமெரிக்கா, பஹ் ரைனின் மன்னராட்சியைத் தாங்கிப் பிடித்து வருவதற் கான காரணங்கள் இவைதான்.

எகிப்திலும், துனிசியாவிலும், மற்ற பிற அரபு நாடு களிலும் நடந்த போராட்டங்கள், இச்சர்வாதிகார/மன் னராட்சியைத் தாங்கிப் பிடித்துவரும் தனியார்மயம் - தாராளமயம் என்ற பொருளாதார அடிக்கட்டு மானத்தைக் குறிவைத்துத் தாக்கவில்லை. முபாரக், பென் அலியின் இடங்களில் அமெரிக்காவின் வேறு விசுவாசிகள் அமர்ந்து கொள்வதற்கு போராட்டத்தின் இந்த பலவீனமே இடம் கொடுத்துவிட்டது. அரபு நாடு களில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் பரவலாகக் காணப்படினும், தங்களைத் தாக்கும் ஆயுதங்கள் அமெ ரிக்காவால் வழங்கப்பட்டவை என்பது அம்மக் களுக்குத் தெரிந்திருப்பினும், இப்போராட்டங்கள் சர் வாதிகார எதிர்ப்பு என்ற வரம்பைத் தாண்டாமல் முடிந்துபோனது வரலாற்று முரண்தான்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## பஞ்சாப்:

# பிணக்காடாகும் கோதுமைக் களஞ்சியம்

**ஆந்திரா, மகாராஷ்டிராவையடுத்து பஞ்சாபிலும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நடந்து வருகின்றன.**

தாராளமயத்தால் இந்தியா ஒளிர்வதாக ஆளும் வர்க்கங்களும் ஊடகங்களும் சித்தரித்துவரும் அதே வேளையில், அத்தாராளமயமாக்கம் இந்தியாவின் கிராமப்புறங்களில் அமைதியாக நரவேட்டையை நடத்திக் கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கடன் சுமையால் தற்கொலை செய்து கொள்ளும் கொடுமை இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இஸ்லாமிய பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட 'இந்தியர்'களின் எண்ணிக்கையை விட, சந்தை பயங்கரவாதத்தால் கொல்லப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை மிக அதிகம் என்பதைப் புள்ளிவிவரங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

ஆந்திராவிலும் மகாராஷ்டிராவிலும் நடந்துவரும் விவசாயிகள் தற்கொலை பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. ஆனால் ஐந்து நதிகள் பாயும் வளமான பூமி, இந்தியாவின் கோதுமைக் களஞ்சியம், பசுமைப் புரட்சியால் பூத்துக் குலுங்கும் மாநிலம் என்றெல்லாம் சித்தரிக்கப்படும் பஞ்சாபிலும்கூட விவசாயிகளின் தற்கொலைகள் தொடர்கின்றன.

விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிக் கள ஆய்வு செய்த பஞ்சாப் வேளாண் பல்கலைக் கழகம், தனது ஆய்வறிக்கையை அண்மையில் பஞ்சாப் அரசிடம் சமர்ப்பித்துள்ளது. 2000 முதல் 2008 வரையிலான காலத்தில் பஞ்சாபின் பதிந்தா, சங்ரூர் மாவட்டங்களில் மட்டும் 2,990 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும், இவர்களில் கூலித் தொழிலாளர்கள் மட்டும் 1,133 பேர் என்றும் அந்த அறிக்கை அதிர்ச்சியூட்டும் உண்மைகளை வெளியிட்டுள்ளது.

கடந்த 2001-ஆம் ஆண்டில் பதிந்தா மாவட்டத்திலுள்ள ஹர்கிஷன்புரா கிராமப் பஞ்சாயத்து, தங்கள் கிராமங்களை விற்பதாக அறிவித்தது. அதைத் தொடர்ந்து மேலும் 5 கிராமப் பஞ்சாயத்துகள் தங்கள் கிராமங்களை விற்பதாக அறிவித்தன. இத்தகைய அறிவிப்புகள் வெளிவராத போதிலும், ஏறத்தாழ இத்தகைய நிலையில்தான் பெரும்பாலான கிராமங்கள் உள்ளன என்றும், கடந்த ஈராண்டாக சங்ரூர், பதிந்தா, பர்னாலா, மன்சா ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வு செய்ததில் விவசாய நெருக்கடியால் இலட்சக்கணக்கான விவசாயிகள் பரிதவிப்பதாகவும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

கடந்த 2009 ஏப்ரல் 27 தேதியிட்ட இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு வெளியிட்ட செய்தியின்படி, பதிந்தா மற்றும் சங்ரூர் மாவட்டங்களில் மட்டும் நாளொன்றுக்கு ஒரு விவசாயி வீதம் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளில் விவசாய கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 45 சதவீதமாக உள்ளது. அதாவது, தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளில் ஏறத்தாழ பாதிப்பேர் கூலி விவசாயிகளாக உள்ளனர்.

நாடெங்கும் தொடரும் விவசாயிகளின் தற்கொலைகளுக்கு எதிராக சீக்கிய விவசாயிகளின் ஆர்ப்பாட்டம்.



சிறு துண்டு நிலம் வைத்துள்ள விவசாயிகள், விவசாய இடுபொருட்களின் செலவு அதிகரிப்பாலும், விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமலும் கடன்பட்டு, அக்கந்துவட்டிக் கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ஆனால், நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு அத்தகைய பிரச்சினைகள் இல்லாதபோது ஏன் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்? ஆந்திரா, மகாராஷ்டிராவை விட, பஞ்சாபில் மட்டும் விவசாயக் கூலித் தொழி



படிப்பகம்

www.padippakam.com

லாளர்கள் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்ளக் காரணம் என்ன?

பஞ்சாபில் 1970-களில் திணிக்கப்பட்ட பசுமைப் புரட்சி பணக்கார விவசாயிகளுக்குத்தான் ஆதாயத்தைக் கொடுத்ததே தவிர, கூலி - ஏழை விவசாயிகளுக்கு அல்ல. பசுமைப் புரட்சியால் விவசாயத்தில் புகுத்தப்பட்ட நவீன எந்திரங்களின் விளைவாக, கூலி விவசாயிகளின் தேவை குறைந்தது. பஞ்சாபில் 1980-களில் 25,000 ஆக இருந்த கதிரடிக்கும் எந்திரம், 1995-இல் 3 இலட்சமாக அதிகரித்தது. இதனால் அறுவடைக் காலங்களில்கூட ஏறத்தாழ ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குத்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. வேலையின்மையால் கூலி விவசாயிகள் ஏழ்மைக்கும் பட்டினிக்கும் தள்ளப்பட்டனர். பசுமைப் புரட்சிக்குப் பின், நிலமற்ற கூலி விவசாயிகளின் வருவாய் கிராமப்புற பொருளாதாரத்தில் வெறும் 10 சதவீதமாகக் குறைந்தது. அதேசமயம், பணக்கார விவசாயிகளின் பங்கு 56 சதவீதமாக அதிகரித்தது. தற்போது தாராளமயமாக்கலின் விளைவாக, பெரும் பண்ணைகளாக விவசாய நிலங்கள் மாற்றப்பட்டு, நவீன எந்திரங்களைக் கொண்டு விவசாயம் செய்யப்படுவதால், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதென்பது குதிரைக் கொம்பாகி விட்டது.

பஞ்சாபில் ஏறத்தாழ 15 லட்சம் பேராக உள்ள பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட சாதியினரான நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், தமது வறுமையைப் போக்க சொந்தமாக கால்நடைகளையும் வளர்த்து வருகிறார்கள். விவசாய வேலை கிடைக்காத காலத்தில் ஆடு - மாடுகள் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டுதான் அவர்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆடு-மாடுகளுக்கு மேய்ச்சலுக்கான வசதியும் வைக்கோலும் அவசியமானவை. ஆனால், இப்போது வைக்கோல் என்பதும் பெரும் வியாபாரப் பொருளாகிவிட்டது. அதன் விலையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது. இதனால் அறுவடை வேலைகளில் ஈடுபடும் கூலி விவசாயிகளுக்கு, பண்ணைகளை வைத்துள்ள பணக்கார விவசாயிகள் வைக்கோலை கூலியில் ஒரு பங்காகத் தருவதில்லை. இதனால் கூலி விவசாயிகள் வைக்கோலை வெளியில் அதிக விலைக்கு வாங்க வேண்டியிருப்பதால் கடனாளியாகின்றனர். கடன் சுமை அதிகரிப்பால் பல கூலி விவசாயிகள் இப்போது மாடுகளை விற்று விட்டனர்.

பஞ்சாபின் பாட்டியாலா பல்கலைக் கழக ஆய்வின்படி, ஏறத்தாழ 70 சதவீத கிராமப்புற கூலி விவசாயிகள் கடனாளிகளாக உள்ளனர். பண்ணையார்களும் கடைக்காரர்களும் அநியாய வட்டிக்குக் கடன் கொடுக்கின்றனர். வட்டியைக் கட்டுவதற்காக கூலி விவசாயிகள் தமது குடும்பத்தின் உணவு, மருத்துவம், துணிமணிகள் முதலானவற்றுக்கான செலவுகளைக் குறைத்துக் கொள்வது அதிகரித்து வருகிறது. சப்பாத்தியுடன் பருப்புக் குழம்பு சாப்பிடுவது நின்று போய், இப்போது வெறும் ஊறுகாய்தான் தொட்டுக் கொள்கிறோம் என்கிறார்கள், பல கூலி விவசாயிகள்.

பஞ்சாபின் 2009-10 பட்ஜெட்டின்படி, கிராமப்புற கடன் 35,000 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கிராமத்தில் வாழும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஏறத்தாழ ரூ.20,000 கடன் உள்ளது. கடன் சுமை, வட்டிச் சுமை தாளாமல் கூலி விவசாயி தற்கொலை செய்து கொண்ட அவலத்துக்குப் பின்னர், அக்கடனை அடைக்க வழிதெரியாமல் அவரது விதவை மனைவியும் குழந்தைகளும் படாதபாடு படுகின்றனர். அக்குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் பெரும் பண்ணைகளில் கொத்தடிமைகளாக்கப் படுகின்றனர். பாட்டியாலா பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில் விவசாயத் தொழிலாளர்களில் 4 சதவீதம் பேர் குழந்தைகள் என்றும், 14 முதல் 20 வயது வரையிலான சிறுவர்களும் இளைஞர்களும் மொத்த விவசாயத் தொழிலாளர்களில் 37 சதவீதமாக உள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது. கடந்த 2000 முதல் 2008 வரையிலான காலத்தில் சங்ரூர், பதிந்தா மாவட்டங்களில் மட்டும் 50-க்கும் மேற்பட்ட கூலி விவசாய விதவைத் தாய்மார்கள் வாழ வழியின்றித் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.



ஐக்கிய சீக்கியர்கள் எனும் தன்னார்வ அறக்கட்டளை நிறுவனம்,
தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்துக்கு மனிதாபிமான அடிப்படையில்
மாதந்தோறும் வழங்கும் கருணைத்தொகை ரூ.250 -ஐ வாங்கக் காத்திருக்கும்
வறுமையில் வாடும் விதவைகள்.

மறுபுறம், தீவிர எந்திர வகைப்பட்ட உற்பத்தியாலும், வரைமுறையின்றித் தண்ணீரை உறிஞ்சி, உரம் - பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கொட்டி நிலத்தை அதீதமாகப் பயன்படுத்தியதாலும், பசுமைப் புரட்சியால் வளம் கொழிப்பதாகச் சித்தரிக்கப்பட்ட பஞ்சாபின் விளைநிலங்கள் இன்று மலடாகிவிட்டன. ஆழ்துளை கிணறுக்கான மோட்டார் மற்றும் உரம் - பூச்சி



படிப்பகம்

www.padippakam.com

மருந்துகளின் விலை உயர்வு முதலான வற்றாலும் நிலம் மலடாகிவிட்டதாலும் விவசாயம் கட்டுபடியாகாமல் கடன் சுமை அதிகரித்து பஞ்சாபில் இன்று சிறு - நடுத்தர விவசாயிகள் தங்களது டிராக்டர் களை விற்று வருகின்றனர். கார்ப்பரேட் விவசாயத்தை அரசே ஊக்குவித்து ஆத ரிப்பதால், சிறு - நடுத்தர விவசாயிகள் தமது துண்டு நிலங்களைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் தத்தளிக்கின்றனர். பெரும் பண்ணையாளர்களாக உள்ள நில மாபியாக்களும் மணல் மாபியாக் களும்தான் அரசியல் தலைவர்களாக உள்ளனர்.



சங்ரூர் மாவட்டத்திலுள்ள லேக்லாகாகா கிராமத்தில் 2008-இல் தங்களது மகன்கள் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொண்ட கோரத்தை துக்கம் தாளாமல் விவரிக்கும் தாய்மார்கள்.

மைய அரசு, மலடாகிவிட்ட நிலத்தை மீண்டும் வளப்படுத்த பெரும் பண்ணையாளர்களுக்கு கோடிக்கணக் கில் மானியமாகக் கொட்டி வருகிறது. இது தவிர, பெரும் பண்ணை விவசாயம், குளிர்பதனக் கிடங்கு, உணவுப் பொருட்களைப் பதப்படுத்தல் முதலானவற் றுக்கும் வரிச்சலுகைகளும் மானியங்களும் அளித்து வருகிறது. இவற்றால் கொழுத்த ஆதாயமடைந்து வரும் பெரும் பண்ணையாளர்கள், இப்போது பஞ்சா பின் நன்செய் நிலங்கள் மலடாகிவிட்டதால், கென்யா, எத்தியோப்பியா முதலான ஆப்பிரிக்க நாடு களில் குத்தகைக்கு நிலங்களைக் கைப்பற்றி ஏற்றுமதி அடிப்படையிலான கார்ப்பரேட் விவசாயத்தில் ஈடு பட்டு வருகின்றனர்.

அறுவடைக் காலங்களில் விழாக் கோலம் பூண் டிருக்கும் பஞ்சாப், இப்போது களையிழந்து நிற்கிறது. கடன் சுமை காரணமாக விவசாயத் தொழிலாளர்கள் இப்போது தனியாக திருமண விழாக்களை நடத்த முடி வதில்லை. சில அரசியல்வாதிகளும், அறக்கட்டளை அமைப்புகளும், வட்டிக்கடைக்காரர் சங்கங்களும் நடத்தும் 100 ஜோடிகளுக்கான திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில்தான் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் திருமணம் செய்ய முடிகிறது. முந்தைய தலைமுறை யினர் கடன் சுமையில் சிக்கி வறுமையில் உழலும் அதேசமயம், புதிய தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்களான தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழி லாளர்கள் அருகிலுள்ள சிறு நகரங்களிலுள்ள சிற் றுண்டி விடுதிகளில் பணியாற்றுகின்றனர். சில இளை ஞர்களும் பெண்களும் நாட்டுப்புற பாடகர்களாக உள்ளனர். சில இளம் பெண்கள் மேடையில் நடன மாடுபவர்களாக உள்ளனர். சிலர் மதுபான விடுதிகளில் சாராயம் ஊற்றித் தருபவராக வேலை செய்கின்றனர். பஞ்சாபில் தாராளமயமாக்கம் தோற்றுவித்த பயங்கரம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பிடுங்கி எறிந்து, அவர்களை நாடோடிகளாகவும் உதிரித் தொழிலாளி களாகவும் வேலையற்றவர்களாகவும் தேவையற்றவர் களாகவும் மாற்றி வருகிறது.

இத்தகைய அவலங்களுக்கு நடுவிலும் பஞ்சாப் விவசாயிகள் உள்ளூரளவில் அவ்வப்போது போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இத்தகைய போராட்டங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வரு வதால், ''பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் சட்டம்-2010'' என்ற கருப்புச் சட்டத்தை இவ்வாண்டு ஜனவரியில் பஞ்சாப் அரசு இயற்றியுள்ளது. இதன்படி, மாவட்ட நீதித்துறை, போலீசு ஆணையரிடம் அனுமதி பெறாத ஆர்ப்பாட் டங்கள், பேரணிகள் முதலானவை தடை செய்யப் படும்; பேரணிகள் - ஆர்ப்பாட்டங்களில் பொதுச் சொத்தையோ தனியார் சொத்தையோ சேதப்படுத்தி யதாக நிரூபணமானால் ஐந்தாண்டு சிறைத் தண்ட னையும் ரூ.20,000 அபராதமும் விதிக்கப்படும் என் கிறது, பெரும் பண்ணையாளர்களின் - புதியவகை கார்ப்பரேட் பண்ணையாளர்களின் நலன்களைக் காப் பதற்கான இச்சட்டம்.

கிராமப்புறங்களில் -று நாள் வேலைத் திட்டத்தில் ஜேசிபி எந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று போராட்டம் நடத்திய கிராந்திகாரி பெண்டூ மஸ்தூர் சங்கம் எனும் தாழ்த்தப்பட்ட கூலி விவசாயிகள் சங்கத் தின் தலைவரான சஞ்சீவ் மிண்ட்டூ, மாவோயிஸ்டு தீவி ரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு இக்கொடிய சட் டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார். விவசாய சங்க முன் னணியாளர்களும் புரட்சிகர - ஜனநாயக இயக்கங் களைச் சேர்ந்தோரும் அடுத்தடுத்து கைது செய்யப் பட்டு வருகின்றனர்.

தாராளமயமாக்கலின் கீழ் இந்தியாவின் பாரம்பரிய விவசாயம் நாசமாக்கப்பட்டு தரகுப் பெருமுத லாளிகள், பன்னாட்டு விவசாயப் பெருந்தொழில் நிறு வனங்கள், பணக்கார விவசாயிகளின் நலன்களுக்கு ஏற்ப விவசாயம் மாற்றியமைக்கப்பட்டு வருவதையும், நாட்டின் வளர்ச்சி என்று சித்தரிக்கப்படும் இந்த மாற் றங்கள் விவசாயிகளை நரபலி கேட்பதோடு, அரசை சட்டிஸ்கர் பாணியில் பாசிச பயங்கரவாத அடக்கு முறைக் கருவியாக மாற்றியிருப்பதையும் பஞ்சாப் நிரூ பித்துக் காட்டுகிறது.

● மோகன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

பிரச்சாரத்தை வி.வி.மு.வினர் மேற்கொண்டனர். பு.ஜ. இதழில் வெளியான மன்மோகன் சிங்கை அமெரிக்க விசுவாச நாயாகச் சித்தரித்த அட்டைப் படத்தை பெரிதாக விளம்பரப்படுத்தி எடுத்துச் சென்றது, மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. ஏப்ரல் 5-ஆம் தேதி முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் கிராமங்கள் தோறும் பிரச்சாரத்தை மேற்கொண்ட இவ்வமைப்பினர், அதன் தொடர்ச்சியாக, 9.4.2011 அன்று மாலை உசிலம்பட்டி பேருந்து நிலையம் அருகே பிரச்சாரம் செய்த போது, தடையை மீறி பிரச்சாரம் செய்வதாகக் குற்றம் சாட்டி அனைவரையும் போலீசு கைது செய்து, பின்னர் விடுவித்தது.


சென்னை-செங்குன்றத்தில்...

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் 30-க்கும் மேற்பட்ட வி.வி.மு. தோழர்கள் செஞ்சட்டையுடன் அணிஅணியாகக் கிராமங்கள் தோறும் சூறாவளி தெருமுனைப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இத்தெருமுனைப் பிரச்சாரங்களோடு, அதிகாலை நேரத்தில் கோடங்கி போல ஒருவர் வேடமிட்டுக் கொண்டு ''கெட்டகாலம் பொறக்குது; இலவசங்களைக் கொடுத்து மக்களை ஏய்க்கிறான்; இவன் கொடுக்கும் இலவசம் நமது வரிப்பணம்; நமது வீட்டு ஆண்கள் டாஸ்மாக் கடையில் கொடுக்கும் பணம்; ஓட்டுப் போடாதே! கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகப் புரட்சி செய்!'' என்று குடுகுடுப்பைக்காரன் சொல்வது போலப் பிரச்சாரம் செய்தனர். நவீன கோடங்கியை அதிசயமாகப் பார்த்த உழைக்கும் மக்கள், இந்த -தனப் பிரச்சாரத்தை உற்சாகத்துடன் வரவேற்று ஆதரித் -தனர்.

-பு.ஜ. செய்தியாளர்கள்.

## எஸ்.டி.எஸ். மெட்ரிக் பள்ளியின் மிரட்டல்,வசூல் வேட்டை:

# கல்விக் கொள்ளையர்களுக்கு எதிராக...

நீதிபதி கோவிந்தராசன் கமிட்டி நிர்ணயம் செய்துள்ள கட்டணத்தைத்தான் தனியார் பள்ளிகள் வசூலிக்க வேண்டும் என்ற நீதிமன்றத் தீர்ப்பைக் குப்பையில் வீசிவிட்டு, பெற்றோர்களையும் மாணவர்களையும் மனரீதியாக வதைத்து மிரட்டி வசூல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறது, கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு அருகிலுள்ள பூதங்குடி எஸ்.டி.எஸ். மெட்ரிக் பள்ளி நிர்வாகம். கூடுதல் கட்டணம் வசூலிப்பதை எதிர்த்து இப்பகுதிவாழ் மக்கள் ஆறு மாதங்களுக்கு முன்பு சாலை மறியல் போராட்டம் நடத்தி வட்டாட்சியர், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் முன்னிலையில் அத்தனியார் பள்ளி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, இனி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனப் பள்ளி நிர்வாகத்தின் சார்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பின்னரும், பள்ளியில் புதிய கட்டிடம் கட்டுவதாகக் கூறி ரூ. 2,500/-வீதம் ஒவ்வொரு மாணவரிடமும் கட்டாயக் கூடுதல் கட்டணம் கேட்டு தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.

இதை எதிர்த்து மனித உரிமை பாதுகாப்பு மையமும் தனியார் பள்ளிகளின் மாணவர் நல பெற்றோர் சங்கமும் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்ததும், பெற்றோர் சங்க உறுப்பினர்களிடம் பள்ளி நிர்வாகம் புரோக்கர்கள் மூலம் நைச்சியமாகப் பேரம் பேசியதோடு, உள்ளூர் ஓட்டுக்கட்சிக்காரர்களை வைத்து மிரட்டிப் பார்த்தது. இவை எதற்கும் அஞ்சாமல் மனித உரிமை பாதுகாப்பு மையமும் பெற்றோர் சங்கத்தினரும் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு 20.4.2011 அன்று சேத்தியாதோப்பு பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.




மாணவர் நல பெற்றோர் சங்கத்தின் தலைவர் வை.வெங்கடேசன் தலைமையில் 400-க்கும் மேற்பட்டோர் திரண்ட இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தில், ''கூடுதல் கட்டணம் வசூலித்து அடாவடித்தனம் செய்யும் பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்வோம் என்று அரசு சவடால் அடிக்கிறதே தவிர, இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. கல்வி வியாபாரிகள் தங்களுக்கு உரிய இலாபம் வராவிட்டால், இந்தத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்குத் தாவிவிடுவார்கள். இக்கொள்ளையர்கள் பள்ளிகளை மூடிவிட்டால், அதில் படிக்கும் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படும். எனவே, கூடுதல் கட்டணம் வசூலிக்கும் அனைத்துத் தனியார் பள்ளிகையும் அரசே ஏற்று நடத்தும் என்று சட்டம் இயற்றப்பட வேண்டும். இலவச பள்ளிக் கல்வியை அரசே வழங்க வேண்டும், ஓட்டுக் கட்சிகளை நம்பி ஏமாறாமல் மக்களே அணிதிரண்டு போராட வேண்டும்'' என்று வழக்குரைஞர்கள் செந்தில், செந்தில்குமார், பரமசிவம், செந்தாமரைக் கந்தன் மற்றும் ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு ஆகியோரும் கண்டன உரையாற்றினர். கல்விக் கொள்ளையர்களுக்கு எதிரான இப்போராட்டம் பகுதிவாழ் மக்களிடம் விழிப்புணர்வூட்டி, பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

தகவல்:
ம.உ.பா.மையம், கடலூர்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# ‘வல்லரசின்’ மரணப் பொந்துகள்!



ஜார்கண்ட் மாநிலம் - ஹஸாரிபாக் மாவட்டத்தில் தற்பொழுது வசித்து வரும் ஜாவிர் குமார் என்ற 14 வயது சிறுவனின் வாழ்க்கைக் கதை நம்மை அதிர்ச்சியில் மட்டு மல்ல, பீதியிலும் உறைய வைத்துவிடும். 10 x 10 சுற்றளவு கொண்ட, 400 அடி ஆழத்திற்குப் பூமிக்குள் இறங்கிச் செல்லும் சுரங்கத்திற்குள் சென்று, நிலக்கரியை வெட்டியெடுத்து வரும் குழந்தைத் தொழிலாளி ஜாவிர் குமார்.

எலி வளையைப் போலப் பூமிக்குள் செல்லும் இச்சுரங்கத்தை மரணக் குழி என்று தான் சொல்ல முடியும். அதற்குள் சென்று நிலக்கரியை வெட்டியெடுத்து வருவது உடலை வருத்தக்கூடியது மட்டுமல்ல, உயிருக்கே உலை வைத்துவிடும் அபாயம் நிறைந்ததாகும். சுரங்கத்திற்குள் பரவிக் கிடக்கும் இருளை விரட்டுவதற்கு ஒரு மண் ணெண்ணெய் விளக்கையும், நிலக்கரியை வெட்டியெடுப்பதற்கு ஒரு இரும்புக் கம்பியையும், வெட்டிய நிலக்கரியை வெளியே எடுத்துவருவதற்கு ஒரு கூடையை யும் எடுத்துக் கொண்டு அதிகாலை ஐந்து மணிக்கு சுரங்கத்திற்குள் இறங்கும் ஜாவிர் குமார், தனது வேலையை முடித்துக்கொண்டு சுரங்கத்தை விட்டு வெளியே வரும்பொழுது, பொழுது சாய்ந்து இருட்டிவிடும். ஒரு இரும்புக் கம்பி, ஒரு கூடை, ஒரு விளக்கு ஆகியவற்றைத் தவிர, வேறெந்த பாதுகாப்புச் சாதனமும் இன்றிச் சுரங்கத்திற்குள் இறங்கும் ஜாவிர் குமார், “சுரங்கத்திற்குள் மண் சரிவு ஏற் பட்டால், உயிரோடு புதைந்து இறந்து போவோம்” எனத் தெரிந்தேதான் இந்த வேலையைச் செய்து வருகிறான்.

ஹஸாரிபாக் மாவட்டத்தில் மட்டும் இது போன்று -ற்றுக் கணக்கான நிலக்கரிச் சுரங்கங்கள் சட்டவிரோதமான முறையில் இயங்கி வருகின்றன. ஜாவிர் குமாரைப் போன்று ஆயிரக்கணக்கான சிறுவர்களும், சிறுமிகளும், பெண்களும் சுரங்க வேலை என்ற பெயரில் தினந்தோறும் மரணத்தோடு கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். இச்சு ரங்கங்களில் கொத்தடிமைகளாக வேலை செய்ய ஒரிசா, பீகார், சத்தீஸ்கர், அசாம் ஆகிய வறிய மாநிலங்களிலிருந்து சிறுவர்கள் பிடித்து வரப்படுகிறார்கள்.



ஜார்கண்ட் மாநிலத்தின் அமைச்சர்கள், போலீசு உயர் அதி காரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் தெரிந்துதான் இச்சட்ட விரோதச் சுரங்கங்கள் நடந்து வருகின்றன. இச்சுரங்கங்களை நடத்தி வரும் மாஃபியா கும்பல் அமைச்சர்களையும், அதிகாரி களையும் “கவனித்து”விடுவதால், அச்சுரங்கங்களில் ஏற் படும் விபத்துக்களை, சிறுவர்களின் மரணங்களைப் பற்றி பதிவு செய்யவும், விசாரிக்கவும் அரசு முன்வருவதே யில்லை. அச்சுரங்கங்கள் சட்ட விரோதமாக இயங்கிவருவதைக் காரண மாகக் காட்டியே, இறந்து போகும் சிறுவர் களின் குடும்பத்திற்கு நட்ட ஈடு தரவும் அரசு முன்வருவதில்லை.

வசந்தி தேவி என்ற தாயிடம், “உங்கள் மகனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைக்காமல், அபாயமிக்க சுரங்க வேலைக்கு ஏன் அனுப்பியிருக்கிறீர்கள்?” எனப் பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, “வறுமை” என எந்தவிதமான உணர்ச்சியு மின்றிப் பதில் அளித்தார், அவர்.

தனியார்மயத்தின் பின் அம்பானியும் டாடாவும் உலகக் கோடீசுவரர்கள் பட்டி யலில் இடம் பிடிக்கிறார்கள். ஜாவிர் குமாரும் வசந்தி தேவியும் அஞ்சுக்கும் பத்துக்கும் தினந்தோறும் மரணத்தோடு போராடுகிறார்கள். இந்தியா வல்லரசா கிறது எனப் பல்லைக் காட்டுகிறார், மன் மோகன் சிங்.



படிப்பகம்